
Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 067 | திங்கட்கிழமை | தை 19 ஆம் நாள் 01 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# புராதன ஆலயங்களின் அருகே திட்டமிட்ட அகழ்வாராய்ச்சிகள்?

- உருத்திரபுரீஸ்வரர் ஆலயமும் இலக்கு!
- தமிழ் மக்கள் கடும் கொதிப்பு!



யாழ்ப்பாணம், பெப்ரவரி 1

கிளிநொச்சி – உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயப் பகுதிக்கு நேற்று முன்தினம் பௌத்த தேரர், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் சென்று ஆராய்ந்துள்ளனர். 19

## தமிழின அழிப்புக்கு எதிராக கைகோர்த்து போராடுவோம்

**கவனவீர்ப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு**

யாழ்ப்பாணம், பெப். 1

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்படவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவைத் தெரி 19

## போராட்டத்துக்கு பெரும் ஆதரவு!

மட்டக்களப்பு, பெப். 1

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை போராட்டத்துக்கு கிழக்கில் உள்ள அனைத்துக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், பல் சமய ஒன்றி 19

## தமிழரின் போராட்டத்தை கொச்சைப்படுத்தாதீர்கள்

**அமைச்சர்களுக்கு மைத்திரி "டோஸ்"**



கொழும்பு, பெப்.1

தீர்வுக்காகவும் நீதிக்காகவும் தமிழர்கள் ஜனநாயக வழியில் போராடினால் அந்தப் போராட்டத்தை எவரும் கொச் 19

## சிப்பாய் உயிர்மாய்ப்பு

முல்லைத்தீவு, பெப்.1

முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் 19

## உடலில் தீ பற்றி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தாயைப் பயமுறுத்த முயன்றவரின் உடலில் தீ 18

## விபத்தில் காயமுற்றவர் உயிரிழப்பு

வவுனியா, பெப்.1

விபத்தில் சிக்கிக் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயி 18

## வடக்கில் மூவருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், பெப்.1

வடக்கில் நேற்று மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுஎன்று வடக்கு 18

## 1 லட்சம் லீற்றருக்கும் அதிக நீர் வலிகாமம் வடக்கில் 'அபேஸ்'!

உறிஞ்சுகிறது தனியார் நிறுவனம்

யாழ்ப்பாணம், பெப்.1

தனியார் நிறுவனம் ஒன்றால் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இருந்து தினமும் ஒரு லட்சம் லீற்றர் தண்ணீர் களவாக உறிஞ்சப்படுகின் 19

## தங்கள் பகுதி தண்ணீரையே விற்கும் வலி.வடக்கு மக்கள்!

*ஒருங்கிணைப்புக் குழுவில் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், பெப்.1

வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பலர், தமது சொந்தக் கிணறுகளில் உள்ள தண்ணீரை தனியார் நிறுவனங் 19

## வடக்கில் இதுவரையும் 4,527 பேருக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், பெப்.1

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை 45 வீதமானவர்களுக்கு 18

## போரில் உதவிய இந்தியா கொரோனாவிலும் உதவி!

*மெச்சுகிறார் லலித் வீரதுங்க*

கொழும்பு, பெப். 1

யாராலும் வெல்லப்பட முடியாது என்று சொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை 18

## பல்கலை. நினைவுத்தூபியின் பெயர் மாறியதால் சர்ச்சை!

**பேரவையின் முடிவை ஏற்க மாணவர் ஒன்றியம் மறுப்பு**

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்குப் பதிலாக வேறு எந்தப் பெயரிலும் தூபிகள் அமைக்கப்படுவதை நாம் ஒருபோதும் 18

## இலங்கையை சீனா ஐ.நாவில் காக்கும்!

*லு சொங் கூறுகிறார்*

கொழும்பு, பெப்.1

எந்தவொரு நாட்டினதும் உள்ளக விவகாரங்களில் ஏனைய நாடுகள் தலையிடுவதற்கு இடமளிக்க முடியாது. இதுவே சீனக் குடியரசின் நிலைப்பாடாகும். அதற்கமையவே ஜெனிவாவிலும் எமது தீர்மானமும், செயற்பாடும் இருக்கும். 18

## இந்தியாவில் இருந்து மேலும் 2.5 மில்லியன் தடுப்பூசிகள்!

கொழும்பு, பெப்.1

இந்தியாவிடம் இருந்து மேலும் 2.5 மில்லியன் தடுப்பூசிகளைப் பெறுவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பாக இலங்கை அரச மருந்துக்கூட்டுத்தாபனம் பணிக்கும் என்றும், ஒரு மாதத்தில் தடுப்பூசிகள் இலங்கைக்கு வரும் என்று எதிர் 18

வலி. வடக்கு

## 4 இடங்களில் புகையிரத கடவைகள் மிக அவசியம்

ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டல்

யாழ்ப்பாணம், பெப். 1
வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 4 பகுதிகளில் புகையிரத பாதுகாப்புக் கடவை அமைக்கவேண்டிய தேவையுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜே/236 பிரிவுக்குட்பட்ட அளவெட்டி தெற்கு, காங்கேசன்துறை மத்தி, பளை வீமன்காமம் பகுதிகளிலும், ஜே/234 பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை மத்தி - சந்தை வீதியிலும் புகையிரதக் கடவை அமைக்க வேண்டிய தேவையுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-319)

வலி. வடக்கு சபைக்குச் சொந்தமான

## 50 கி.மீ வீதிகளில் சீரமைப்புத் தேவை!

யாழ்ப்பாணம், பெப். 1
வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான பகுதிகளில் சுமார் 50 கிலோமீற்றர் வீதிகள் சீரமைக்க வேண்டிய தேவையுள்ள வீதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் 26 கிலோமீற்றர் வீதிகளும், ஏனைய பிரதேசங்களில் 24 கிலோமீற்றர் வீதிகளும் சீரமைக்க வேண்டிய தேவையுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-319)

சேந்தான்குளம், வலித்தூண்டல் பகுதியில்

## மழைநீர் சேகரிப்புக்கென குளம் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 1
ஜே/222 கிராம அலுவலர் பகுதிக்குட்பட்ட வலித்தூண்டல், சேந்தான்குளம் பகுதிகளில் குளமொன்றை அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படுகின்றது.

ஜே/222 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் (சேந்தான்குளம், வலித்தூண்டல்) நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாத காணியொன்றை அடையாளப்படுத்தி அதில் குளமொன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் நிலவும் நன்னீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலேயே மேற்படி திட்டம் பரிசீலிக்கப்படுகின்றது. மழைநீரைச் சேகரிப்பதே குறித்த கட்டுமானத்தின் முதன்மை நோக்கமாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் சேந்தான்குளம், கூவில், வலித்தூண்டல், வசந்தபுரம் பகுதிகளில் வெள்ளநீர் வடிந்தோடும் வகையில் வாய்க்கால் அமைக்கவும் பரிசீலிக்கப்படுகின்றது. வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே மேற்படி விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ம-319)

# கடற்படையிடம் நீர் சுத்திகரிப்பு

மக்களின் விருப்பமும் அதுவே!

யாழ்ப்பாணம், பெப். 1
**வலிகாமம் வடக்கு - நல்லிணக்கபுரத்தில் அமைந்துள்ள ஆரோ தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்வாகத்தைத் தொடர்ந்தும் கடற்படையிடமே விட்டுவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வலிகாமம் வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது மேற்படி நிலையத்தின் நிர்வாகம் கடற்படையிடம் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிரதேச சபை அதைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், கடற்படை குறித்த சேவையை இலவசமாகவே செய்கின்றது. குறித்த திட்டத்தில் இருந்து எமக்கு இதுவரை குடிதண்ணீர் எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல் சீராகக் கிடைக்கக்கூடியவாறு உள்ளது. பிரதேச சபை பொறுப்பேற்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், கடற்படை மேற்கொண்டது போல இலவசமான சேவையையே முன்னெடுக்க வேண்டும். வரிகள் அறவிடக்கூடாது. எமது பொருளாதாரத்தைக் கருத்தில்கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலரும், 'குறித்த திட்டத்தை கையளிக்கக் கடற்படை தயாராகத்தான் உள்ளது. ஆனால் பராமரிப்பு மற்றும் அதுசார் நிதி நிலைமைகள், ஆளணிகள் என்பவற்றைக் கருத்தில்கொண்டு தொடர்ந்தும் கடற்படையிடமே அது கையளிக்கப்பட்டுள்ளது' - என்றார். (ம-319)



### துப்புரவுப் பணி

சாவகச்சேரி, பெப்.1
மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் இளைஞர் அணியினர், அந்தப் பகுதியில் உள்ள கமலாம்பிகை வித்தியாலயத்தில் துப்புரவுப் பணிகளை நேற்று முன்னெடுத்தனர்.

பாடசாலை ஆரம்பித்துள்ள நிலையில், மாணவர்களின் நலன் கருதி துப்புரவுசெய்து தருமாறு பாடசாலை அதிபர் சனசமூக நிலையத்திடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்தத் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ற-9)

## பெண்கள் இராணுவ முகாம் விடுவிக்கப்படுதல் வேண்டும்!

வலி. வடக்கு ஒருங்கிணைப்பில் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 1
வலிகாமம் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பெண்கள் இராணுவ முகாமொன்று விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரன் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலிகாமம் வடக்கு பகுதியில் நீண்டகாலமாக பெண்கள் இராணுவ முகாம் ஒன்று அமைந்துள்ளது. தனியாருக்குச் சொந்தமான காணியில் இந்த முகாம் அமைந்துள்ளது. இந்த இராணுவ முகாமுக்கு அருகில் பாடசாலையும், ஊரணி அந்தோனியார் கோவில் என்பனவும் அமைந்துள்ளன. அவற்றுக்குச் சென்றுவரும் மக்களும் மாணவர்களும் அச்சம் கலந்த சூழ்நிலையிலேயே வாழ்கின்றனர்.

எனவே இந்த இராணுவ முகாமை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-319)

## தையிட்டி நீர் விநியோகத்தை பரவலாக்குவதற்கு பரிசீலனை

யாழ்ப்பாணம், பெப். 1
தையிட்டி நீர் விநியோகத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் கிராமங்கள் தவிர்ந்த மேலும் 6 கிராமங்களுக்கு குறித்த திட்டத்தை விரிவுபடுத்த பரிசீலிக்கப்படுகின்றது என்று வலி.வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை மத்தி, இக்கிரானை, கட்டுவன், ஆவளை, வள்ளுவர்புரம், புதிய வள்ளுவர்புரம் ஆகிய பகுதிகளே இந்த விரிவாக்கத் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் சமுதாய குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் கொல்லன்கலட்டி, இளவாலை - வலித்தூண்டல், இளவாலை - கீரிமலை ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-319)



## பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்துரை

யாழ்ப்பாணம், பெப். 1
கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயம், ஊற்றுப்புலம் பாடசாலை மற்றும் புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு கல்வி, சுகாதாரம், ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவம் ஆகியன பற்றிய விழிப்புணர்வுக் கருத்துரைகள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஏற்பாட்டில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளருமான மருத்துவர் த.சத்தியமூர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை கருத்துரை வழங்கினார். (து-214)

### வலிகாமம் வடக்கில்

# 7 முன்பள்ளிகளுக்கு குடிநீர் வசதியில்லை

## ஏனைய மூன்றுக்கு மலசலகூடம் இல்லை

யாழ்ப்பாணம். பெப். 1

வலிகாமம் வடக்கில் இயங்கும் முன்பள்ளிகளில் 6 முன்பள்ளிகளுக்குக் குடிதண்ணீர் வசதியில்லை. 2 முன்பள்ளிகளுக்கு மலசலகூட வசதியில்லை. ஒரு முன்பள்ளிக்கு இவை இரண்டு வசதிகளும் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, வளர்மதி முன்பள்ளி, சிவலோகபதி முன்பள்ளி, வாணி முன்பள்ளி, பாரதி முன்பள்ளி (இளவாலை), சிவானந்தா முன்பள்ளி, பாரதி முன்பள்ளி (வயாவிளான்) ஆகிய முன்பள்ளிகள் குடிதண்ணீர் வசதியில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அழகொல்லை விநாயகர் முன்பள்ளி, நாமகள் முன்பள்ளி இரண்டும் மலசலகூட வசதியில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இளந்தளிர் முன்பள்ளி இவை இரண்டு வசதிகளும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-319)

# பலாலி, மயிலிட்டி, கே.கே.எஸ் பகுதிகளுக்கு தனி மருத்துவமனை

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், பெப். 1**

**பலாலி, மயிலிட்டி, கே.கே.எஸ் ஆகிய பகுதிகளுக்குத் தனியான மருத்துவமனையொன்று வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அண்மையில் நடைபெற்ற வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இடப்பெயர்வுக்கு முன்னர் குறித்த பகுதியில் மருத்துவமனையொன்று செயற்பட்டு வந்துள்ளது. குறித்த பகுதியில் தனியான மருத்துவமனையொன்று தற்போது அவசியமாகவுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு அந்த வசதியை எமக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மக்கள் கோரிக்கையை முன்வைத்தனர்.

அது தொடர்பில் துரிதகதியில் பரிசீலிக்கப்படும் என்று துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது குறுக்கிட்ட குறித்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், காசநோய் மருத்துவமனை அந்தப் பகுதியில் அமைக்கப்படலாம் என்று அறிகின்றோம். அவ்வாறான மருத்துவமனைகள் வருவது பொருத்தமானதாக இருக்காது என்று சுட்டிக்காட்டினார். இதற்குப் பதில் வழங்கிய துறைசார் அதிகாரி, 'காச நோய்க்கு என்று தனியான மருத்துவமனைகள் தற்போது இலங்கையில் இல்லை. ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் அதற்கெனத் தனியான பிரிவுகள் தான் உள்ளன. ஆதலால் அச்சப்படத் தேவையில்லை'-என்றார். (ம-319)

# கொக்காவில் – துணுக்காய் வீதியில் பேருந்துச் சேவைகளை ஏற்படுத்துக

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.1

கொக்காவில் - துணுக்காய் வீதியூடான பேருந்துச் சேவைகள் இடம்பெறாததால் புத்துவெட்டுவான் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் தினமும் ஏழு கிலோ மீற்றர் தூரம் நடந்தே பாடசாலைக்குச் செல்கின்றனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

எமது கிராமத்தில் ஐந்தாம் வகுப்பு வரையான ஆரம்பப்பாடசாலையே உள்ளது. ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளுக்காக அயற்கிராமமான ஐயங்கன் குளம் கிராமத்திலுள்ள பாடசாலைக்குச் செல்கின்றனர். இந்த மாணவர்கள் எமது கிராமத்திலிருந்து தினமும் ஏழு கிலோ மீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர். இவ்வாறு தினமும் நடந்து பாடசாலைக்குச் செல்ல முடியாததால் மாணவர்கள் பலரின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வரவு நாள்கள் குறைவடைகின்றன. எனவே எமது மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுக்க எமது கிராமத்தினூடாக பாடசாலை நேரத்திலாவது பேருந்துச் சேவையை வழங்குமாறு கோருகின்றோம். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலைக்கான பேருந்து ஒன்று பாடசாலை நேரத்தையொட்டி எமது கிராமத்தினூடாக தனது சேவையை வழங்கியது. எனினும் கடந்த இரண்டு வருடங்களாக எமது கிராமத்தினூடாக எந்தவிதமான பேருந்துச் சேவைகளும் நடைபெறவில்லை- என்றனர். (ப-ரி1)

# அப்பாவிப் பெண்ணிடம் தந்திரமாக பணம் பறிப்பு

## மக்களே ஏமாறாதீர்!

வலி.தென்மேற்கு. பெப்.1

வாழ்வாதார உதவி வழங்கப்படும் என்று கூறி அரச அதிகாரிகளூடாக பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றைத் தொடர்புகொண்ட நபர் அந்தப் பெண்ணை ஏமாற்றி ஈசி காஷ் ( easy cash) மூலம் பணம் அபகரித்த சம்பவம் ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லிகைத் தீவு கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. சாதுர்யமான முறையில் பிரபல தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றில் இருந்து பேசுகிறேன் என்று தெரிவித்து, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்புகொண்ட நபர், 'நாம் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்கள் சிலவற்றுக்கு வாழ்வாதார உதவி வழங்க உள்ளோம்' என்று கூறி அந்த அதிகாரியின் வாயிலாக பிரதேச செயலரையும், அவர் ஊடாக கிராம அலுவலரையும் தொடர்புகொண்டு மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொருண்மியம் நலிவடைந்த, பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணின் விவரத்தைப் பெற்றுள்ளார். விவரங்களின் அடிப்படையில் குறித்த பெண்ணைத் தொடர்பு கொண்டு தமது நிறுவனம் ஊடாக வாழ்வாதார உதவியாக ஒரு லட்சம் ரூபா வழங்க உள்ளோம் எனக் கூறியுள்ளார். அத்துடன் குறித்த பெண்ணின் வங்கிக் கணக்கு இலக்கம், அவர் செய்ய விரும்பும் தொழில் போன்ற விவரங்களையும் நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் சேகரித்துள்ளார். மீண்டும் தொடர்புகொண்ட மேற்படி நபர் வாழ்வாதார உதவியாக தங்கள் வங்கிக் கணக்கில் ஒரு லட்சம் ரூபா வைப்புச் செய்யப்படவுள்ளது என்றும் அதனைப் பெறுவதற்கு ஆவணங்கள் தயாரிப்பதற்கான செலவாக 4 ஆயிரத்து 800 ரூபா செலுத்த வேண்டியுள்ளது என்றும் அதனை ஈசி காஷ் ( easy cash) வழியாகச் செலுத்துமாறும் கோரியுள்ளார். அதனை நம்பிய அந்தப் பெண் ஈசி காஷ் (easy cash) மூலம் பணம் செலுத்தியுள்ளார். எனினும் குறித்த நபரின் தொலைபேசி இலக்கம் நிறுத்திவைக்கப்பட்டதால் சந்தேகமடைந்த பெண், கிராம அலுவலருக்கு தகவல் வழங்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ப-115)



கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் இராஜகோபுரத்துக்கான குடமுழுக்கு கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்காக மக்களின் போக்குவரத்தை தடுப்பதா?

## கரைத்துறைபற்று பிரதேச உறுப்பினர் விசனம்

முல்லைத்தீவு, பெப்.1

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குருந்தூர் மலைக்குச் செல்வதற்கு பொது மக்களின் வீதியைத் தடை செய்வதா என்று கரைத்துறைபற்று பிரதேச சபையின் உறுப்பினர் உதயகுமார் றனிஸ்லா கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தண்ணிமுறிப்புக் குளத்தில் உள்ள குருந்தூர் மலைக்கு தொல்லியல் ஆய்வுகள் செய்வதற்காக அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் வந்தனர். அவர்கள் மலைக்குச் செல்வதற்காக ஆறுமுகத்தான்குளம் மக்கள் பயன்படுத்துகின்ற முதன்மை வீதியில் கிரவல் மண் குவிக்கப்பட்டு பயணத் தடைகள் ஏற்படுத்தப்பட்டதால் தற்போது மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பல ஆண்டுகளாக எமது கிராம வீதிகள் சீரமைக்கப்படாது உள்ள நிலையில் தொல்லியல் ஆய்வுக்கென வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வீதியில் மண் குவியல்களை ஏற்படுத்தி போக்குவரத்துத் தடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்களின் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு வீதியில் குவிக்கப்பட்டுள்ள மண் குவியல்கள் அகற்றப்பட வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ-ரி2)

ஐ.நா. அறிக்கையில்

# எல்லாவற்றையுமே ஏற்கத்தேவையில்லை

### கோத்தா அரசுக்கு முண்டு கொடுக்கிறது சஜித் தரப்பு

கொழும்பு, பெப். 1

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் அனைத்து விடயங்களையும் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆனால், அனைத்தையும் புறக்கணித்து விடவும் முடியாது. இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இம்முறை ஜெனிவா கூட்டத்தொடரில் சவாலை எதிர்கொள்ளப் போகின்றது என்பது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலிருந்து தெளிவாகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் குறித்தும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளைத் திருத்தியமைக்குமாறே நாம் வலியுறுத்தினோம். எனினும், அரசு அதனை முழுமையாக இல்லாதொழித்து 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியது.

சர்வதேசத்தின் மத்தியில் ஏனைய நாடுகளின் உதவியின்றி எம்மால் தனித்துப் பயணிக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது நாட்டின் மீது சர்வதேசத்தால் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம். எனினும், நாம் இவை அனைத்தையும் நடுநிலையுடன் ஆராய்ந்து, ஐ.நா. மனித உரிமைகள் சபையுடனும் கலந்தாலோசித்து, தீர்வொன்றை நோக்கிப் பயணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே புத்திசாலித்தனமான செயற்பாடாகும், என்றார். (ஒ-22)

ஆசிரியர்களின் சம்பளத்தை வெட்டும்

# 19ஆம் திகதிய கடிதத்தை உடன் மீளப்பெறவேண்டும்

### வடக்கு அமைச்சுக்கு ஆசிரிய சங்கம் கடிதம்

கொழும்பு, பெப். 1

**கடந்த 18ஆம் திகதிய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கு, அன்றைய நாளை சம்பளமற்ற விடுமுறையாகக் கணிப்பிடுமாறு அறிவுறுத்திய வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரின் கடந்த 19 ஆம் திகதிய கடிதம் தொடர்பான நடவடிக்கைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இந்தவிடயம், இலங்கை அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள, சுதந்திரமாகச் செயற்படும் தொழிற்சங்க உரிமையை நசுக்கும் செயற்பாடு என்று சுட்டிக்காட்டியுள்ள சங்கம், இதுபற்றிய கடிதத்தை அமைச்சின் செயலர் மீளப்பெறவேண்டும் என்றும் கோரியுள்ளது.

இதுபற்றி இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

18ஆம் திகதிய ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக எமக்கும் அதிருப்திகள் உள்ளன. ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தொடர்பாகவும் எமக்கு விமர்சனம் உண்டு. விசேடமாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகச் செயற்படும் ஜே.வி.பி.யின் தொழிற்சங்கமே இந்த ஆர்ப்பாட்டத்தை வழிநடத்தியிருந்தது.

இடமாற்றச் சபையில் தீர்மானங்களை எடுத்துவிட்டு, ஆசிரியர்களைத் தவறாக வழிநடத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருந்தது.

ஆயினும், ஆர்ப்பாட்டங்களுக்கு வந்தவர்களுடைய உரிமையை அடக்கும் வகையில், வடக்கு மாகாணக் கல்வியமைச்சு செயற்படக் கூடாது. எனவே வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் கடந்த 19 ஆம் திகதிய கடிதம் தொடர்பான செயற்பாட்டை சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக மீளப்பெறவேண்டும்.

ஆர்ப்பாட்டம் செய்தமை தொழிற்சங்க உரிமை. தொழிற்சங்க நடவடிக்கைக்காக விடுமுறை அறிவித்தோ அல்லது விடுமுறை அறிவிக்காமலோகூட ஆர்ப்பாட்டம் செய்யமுடியும். இதனை இலங்கை அரசமைப்பும், சட்டமும் ஏற்றுக்கொண்டுள்ளது. போராட்டவழிமுறைகளை தொழிற்சங்கங்களே தீர்மானிக்க முடியும் என்றும் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ளபோது, அவசியமற்ற வகையில் தாபனவிதிக் கோவையைத் தொடர்புபடுத்தி ஆசிரியர்களின் உரிமைகளை நசுக்க முயல்வது அடிப்படை உரிமை மீறலாகும்.

எனவே, தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் சுதந்திரமாகச் செயற்படும் உரிமையை, இலங்கையின் அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு, பொருத்தமற்ற நடைமுறைகளால் உரிமைகளை நசுக்கும் செயற்பாடுகளை வடக்கு மாகாணக் கல்வியமைச்சு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ள தொழிற்சங்க உரிமைகளை நசுக்கும் செயற்பாடு வடக்குமாகாணக் கல்வியமைச்சால் மீளப்பெறப்படவில்லையாயின், உரிமைகளை வென்றெடுப்பதற்காக இலங்கை ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும். என்றுள்ளது. (த)

# இலங்கை, இந்திய மீனவர் எல்லை தாண்ட முடியாது

### இந்திய அரசு நடவடிக்கை

கொழும்பு, பெப்.1

இலங்கை, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் மற்றும் தடை செய்யப்பட்ட இரட்டைமடித் தொழிலைக் கட்டுப்படுத்த இந்திய மீன்பிடி அமைச்சு இராமேஸ்வரத்திலும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி தமிழகத்தில் இருந்து புறப்படும் ரோலர் படகுகள் இலங்கை எல்லைக்குள் ஊடுருவுவதைக் கட்டுப்படுத்த இராமேஸ்வரம் கரையோர காவல் படையினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய ரோலர் படகுகளைக் கட்டுப்படுத்துவதற்கு ராமேஸ்வரம் கரையோர காவல் படையினருக்கு இந்திய மீன்பிடி அமைச்சு அதி நவீன வசதிகள் கொண்ட சமிஞ்ஞை வசதிகள், ஒலி பெருக்கி மற்றும் ராடர் வசதிகளுடன் ஒளித்தெறிப்பு வசதி கொண்ட ஓர் புதிய படகை வழங்கியுள்ளது.

634 ரோலர் படகுகள் மூலமும், நாட்டுப் படகுகள் 200ஐப் பயன்படுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடுகோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினத்தில் 264 ரோலர் படகுகளும், பாம்பன் பகுதியில் 100 நாட்டுப் படகுகளும் உள்ளன. அதேநேரம் இப் பகுதிகளில் 75 வரையான பதிவுசெய்யப்படாத படகுகளும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

# இலங்கை சிறந்த அரசாம்!

கொழும்பு, பெப். 1

ஜனநாயகம், இறையாண்மை மற்றும் சமூக நோக்குடைய சிறந்த அரசாக சர்வதேச ரீதியில் இலங்கை அங்கீகாரம் பெற்றுள்ளது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் மரியா சகரோவால் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் ஆக்கபூர்வமானவையாகவே காணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச ரீதியான விவகாரங்களில் இலங்கையுடனான அரசியல் உறவுகளை நாம் உயர் மட்டத்தில் பேணி வருகின்றோம். ரஷ்யாவின் தேயிலை இறக்குமதித் துறையில், இலங்கை மிகப் பெரிய பங்காற்றி வருகின்றது' என்றார் மரியா. (ஒ-இ)

# பிளாஸ்ரிக் பொருள்களுக்கு மார்ச்சுக்குப் பின் நிரந்தரத் தடை

கொழும்பு பெப்.1

ஒரு தடவை மற்றும் குறுகிய காலத்துக்குப் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் பிளாஸ்ரிக் பொருள்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் தடை செய்யப்படவுள்ளன.

இந்தத் தடை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று சுற்றுச்சூழல் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, 20 மில்லிமீற்றர் அல்லது 20 கிராம் நிறைக்கு குறைவான சிறிய பைகள் மற்றும் காற்றடைக்கப்படக்கூடிய விளையாட்டுப் பொருள்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு பிளாஸ்ரிக் காம்புகளுடனான கொட்டன் பட்ஸ் ஆகியனவும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் தடைசெய்யப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# ஊசிக்காக முனையத்தை பண்டமாற்று செய்யாதீர்!

### எதிர்க் கட்சி வலியுறுத்து

கொழும்பு, பெப்.1

இந்தியாவின் கொரோனா வைரஸ் மருந்துகளுக்காக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை பண்டமாற்று செய்யவேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்தார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை இந்தியா வழங்கியமை குறித்து மகிழ்ச்சியடைகின்றோம். எனினும் தடுப்பு மருந்துக்காக கிழக்கு கொள்கலன் முனையத்தை பண்டமாற்று செய்யக்கூடாது. தற்போதைய அரசு நாட்டின் வளங்களை விற்பனை செய்யப் போவதில்லை எனத் தெரிவித்தே ஆட்சிக்கு வந்தது. எனினும் வெளிநாட்டு மூலதனத்தை பெறுகின்ற போர்வையில் அரசு தேசத்தின் சொத்துக்களை விற்பனை செய்கின்றது என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொரோனாக் கால விகாரைகள்

எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதை இம்மியும் தவறாமல் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது கோத்தாபய அரசு. ஒரு பக்கம் நாடு முழுதும் கொரோனா எந்தத் தங்குதடையுமில்லாமல் பரவிக்கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் இந்தச் சந்தடி சாக்கில் தமிழர் தாயகத்தில் எங்கெல்லாம் விகாரைகளை அமைக்கத் திட்டமிட்டிருந்ததோ அங்கெல்லாம் தொல்பொருள் ஆய்வுகளை ஆரம்பித்தும், அடிக்கல் நாட்டியும் கேட்பார் எவருமின்றி ஆடிக்கொண்டிருக்கிறது அரசு.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் விகாரை இருந்தது என்று தொல்லியல் ஆய்வுகள் தொடங்கப்பட்டதன் மூலம் இந்த 'கொரோனாக்கால புத்த விகாரைகள்' திட்டத்துக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டிடம் சிதைக்கப்பட்டு, புத்தர் சிலை வைக்கப்பட்டே இந்தத் தொல்லியல் ஆய்வு நடவடிக்கைகள் தொடங்கியிருந்தன. எந்தவொரு ஆய்வும் முன்முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு செய்யப்படுபவை அல்ல. ஆய்வுகளின்போது கிடைக்கும் ஆதாரங்களைப் பகுப்பாய்வு செய்து, விஞ்ஞானபூர்வ ஆய்வுமுறைகளின் அடிப்படையில் பெறப்படும் தெளிவுகளின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்வதே உண்மையான ஆய்வு. ஆனால் குருந்தூரில் விகாரைதான் இருந்தது என்று வலிந்து, செயற்கையாக நிரூபிக்கவே இப்போதைய ஆய்வு.


குருந்தூர் மலை சலசலப்புகள் அடங்குவதற்கிடையில் காங்கேசன்துறையில், திஸ்ஸ விகாரை இருந்தது என்று சொல்லப்படும் இடத்துக்கு அண்மையில் உள்ள காணியில் 100 அடி உயரமான விகாரையைக் கட்ட இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அடிக்கல் நட்டுள்ளார். இத்தனைக்கும் அதற்கு முதல் நாள் நடந்த பிரதேச ஒருங்கிணைப்புகுக்குழு கூட்டத்தில் இந்த விகாரை அமைக்க தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் அந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தீர்மானத்தை எள்ளளவும் மதிக்காமல், தாம் நினைத்ததை நடத்தி முடிப்போம் என்று அடிக்கல்லை வைத்துவிட்டுப் போயிருக்கிறார் இராணுவத் தளபதி. அப்படியானால், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை நேரத்தையும், பணத்தையும், மனித வளத்தையும் செலவழித்து பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் எடுக்கப்படும் தீர்மானங்கள் செல்லாக்காசுகளே என்பதும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தனைக்கும் அரச சார்பிலான நாடாளுமன்ற உறுப்பினரே இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களின் இணைத்தலைவர். அவர் தலைமையில் எடுக்கப்பட்ட முடிவை, அவர் அங்கம் வகிக்கும் அரசு காலால் மிதித்துவிட்டு விகாரை கட்டத் தொடங்கிவிட்டது என்பது எவ்வளவு பெரிய அபத்தம்.

இவ்வளவும் போதாதென்று உருத்திபுரம் சிவன் கோயில் சூழலிலும் அதே பிக்குகள் குழு தொல்லியல் திணைக்கள கூட்டணியுடன் குதித்திருக்கிறது. அங்கும் விகாரை இருந்ததாகச் சொல்லி ஆய்வுகள் நடக்கப்போவதையே நேற்று அங்கு நடந்தவை சொல்லிச் செல்கின்றன. எதிர்காலத்தில் உருத்திரபுரத்திலும் மிகப்பெரியதொரு விகாரை கட்டப்பட அதிக வாய்ப்புகளுண்டு. முன்னரெல்லாம் குண்டு வீச்சு விமானங்களைக் கண்டு கலங்கியது போல, இப்போது தொல்லியல் திணைக்களத்தைக் கண்டு அச்சப்படும் நிலைக்கு தமிழினம் வந்துவிட்டது. அந்தளவுக்கு அரசின் நவீன ஆக்கிரமிப்பு படையணியாக தொல்லியல் திணைக்களம் மாறிக்கொண்டு வருகின்றது. தமிழர்களின் மரபார்ந்த அடையாளங்கள், சின்னங்கள் மற்றும் கோயில்கள் போன்றவை இடிக்கப்படும்போது அதனை ஏனென்றும் கேட்காத தொல்லியல் திணைக்களம், விகாரை வைப்பதற்கு 'தோதான' இடங்களில் சோடிக்கப்பட்ட ஒரு புராதனக் கதையைச் சொல்லி அங்கு சிங்கள பௌத்த இருப்பை நிறுவ முனைகின்றது.

இப்படியாக கொரோனா நெருக்கடியைப் பயன்படுத்தி, விகாரைகளைக் கட்ட நினைக்கும் அரசு, அதனால் ஏற்படும் நெருக்கடி நிலையைக் கவனத்தில் எடுக்க மறுக்கின்றது. முக்கியமாக இம்முறை ஜெனிவா அமர்வில் இந்த விகாரை அமைப்புகளும் முக்கிய பேசுபொருளாக இருக்கும். இன்னமும் தமிழர்கள்மீது மறைமுகமாக நிகழ்த்தப்படும் ஆக்கிரமிப்பாக விகாரை விவகாரம் பேசப்படும் போது அரசு என்ன சொல்லப்போகின்றது?. ஏனெனில் ஜெனிவாத் தீர்மானங்கள் , வடக்கில் நடக்கும் உப்புச்சப்பற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்ட முடிவுகளைப் போல கடந்துசெல்லக் கூடியவை அல்ல என்பதையாவது அரசாங்கம் புரிந்துகொண்டால் சரி.

## இன்றைய கருத்தோவியம்




நன்றி - பிரதீப்

# பயங்கரவாத தடைச் சட்டம்: திருத்தவே மாட்டோம்

## அடம்பிடிக்கும் கோத்தா அரசு

கொழும்பு, பெப். 1

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உடனடியாக எந்தத் திருத்தத்தையும் செய்ய முடியாது என்று அரசு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும், ஐ.நா. மனித உரிமைகள் சபையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்த நிலையில் வெளிவிவகார அமைச்சின் செயலர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே மேற்கண்டவாறு கூறியுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக அதில் மாற்றங்களை மேற்கொள்ள இடமளிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.இ)

# பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வருகை



கொழும்பு,பெப்.1

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவர் தனது பயணத்தின்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவுள்ளார்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் 2016 இல் கொழும்புக்கு பயணம் செய்த பின்னர் பாகிஸ்தான் பிரதமர் ஒருவர் மேற்கொள்ளவுள்ள முதல் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# இந்தியாவின் இதயம் இலங்கை

## 'ஐஸ்' வைக்கிறார் தூதுவர் பாக்லே

கொழும்பு, பெப். 1



பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கையில், பாரத இதயத்தில் இலங்கைக்கு என்றும் சிறப்பிடம் உள்ளது. இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார். உலகம் வைரஸ் தாக்கத்திலிருந்து மீண்டெழும் நோக்கில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கும் திட்டம் நிச்சயம் வெற்றியளிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விமான நிலையத்துக்குச் சென்றிருந்தார். இது இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவின் உச்ச நிலையை வெளிப்படுத்தியுள்ளது என்று கோபால் பாக்லே கூறியுள்ளார்.

தடுப்பூசி வழங்குவதன் மூலம் இலங்கை மீண்டும் உலக நாடுகளுடன் தொடர்புகளைப் பேணக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதுடன், இது முழு உலகையும் பாதித்துள்ள வைரஸ் பரவலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வளவு வளங்கள் காணப்பட்டாலும் சுகாதாரம் மற்றும் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றமடைந்திருந்தாலும் எந்தவொரு நாட்டுக்கும் இந்த வைரஸுடன் போராட முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச தொடர்புகள்தான் இந்த வைரஸுக்கு எதிராகப் போராடுவதற்கான சிறந்த வழிமுறையாகும் எனவும், அயலகத்துக்கு முதலிடம் என்பதே இந்தியப் பிரதமர் மோடியின் கொள்கை என்பதுடன் இந்தியாவின் அயல் நாடுகளில் இலங்கையானது இந்திய மக்களின் மனதில் பிரதான இடம்பிடித்துள்ள நாடு என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் எனவும் கோபால் பாக்லே குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# போராட்டத்துக்கு விக்கி பேராதரவு



யாழ்ப்பாணம், பெப். 1

**வடக்கு மற்றும் கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகிறோம் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள் ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில், மட்டக்களப்பிலிருந்து சிவயோகநாதம் மற்றும் கிளிநொச்சியிலிருந்து திருமதி கனகரஞ்சினி ஆகியோர் இது சம்பந்தமாக எமது ஆதரவைக் கோரியுள்ளனர்.

தமிழர்கள் வெறுமனே பேச்சோடு மட்டும் நின்றுவிடாமல் அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டியுள்ளது. போராட்டங்களை யார் பின்னின்று நடத்துகின்றார்கள் என்பதிலும் பார்க்க யாருக்கு எமது நிலை பற்றித் தெரியப்படுத்தலாம் என்பதையே எமது குறிக்கோளாக வைத்து காய்களை நகர்த்த வேண்டும்.

2015ஆம் ஆண்டு எமது இனப்படுகொலை பிரேரணையை வடமாகாண சபை நிறைவேற்றியதும் அதனால் பதற்றப்பட்டவர்களில் ஒருவர் எம்.ஏ.சுமந்திரன். இன்று அவர் மாறிவிட்டார். அவர் இந்த மக்கள் சார் சிவில் நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார். அவரை அவ்வாறு மாற்றியது எமது மக்களே. மக்கள் மனம் வைத்தால் எதனையும் நாம் பெறலாம்.

ஆகவே மக்கள் மன எழுச்சியாக நடைபெறவிருக்கும் கவனவீர்ப்புப் போராட்டம் வெற்றிகரமாக இடம்பெற எமது தமிழ் மக்கள் எவரும் தமது மனமுவந்த ஆதரவை அவர்களுக்கு நல்க வேண்டும், என்றுள்ளது. (ஒ.5)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை ஜனாதிபதியிடம் இன்று கையளிப்பு

கொழும்பு, பெப். 1

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தநிலையில் குறித்த அறிக்கை அச்சிடும் பணி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான மறைக்கப்பட்ட பல்வேறு விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 15 மாதங்கள் காலப்பகுதியில் 450க்கும் மேற்பட்ட நபர்களிடம் சாட்சியப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (து-இ)



## மரக்கறிகளின் விலையில் மாற்றம்

கொழும்பு, பெப். 1

நாட்டில் மரக்கறி வகைகளின் விற்பனை விலைகள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளன. சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் பங்குகள் குறைக்கப்பட்டமையாலேயே அவற்றின் விற்பனை விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் வரை உயர்வடைந்து காணப்படும் எனவும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்தது. (ரி5.இ)

## கொரோனா வைரஸ் தொற்று: சிங்கப்பூரை விஞ்சியது இலங்கை

கொழும்பு, பெப். 1

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கையின் படி இலங்கை தற்போது சிங்கப்பூரைவிட அதிக தொற்றாளர்கள் கொண்ட நாடாக மாறியுள்ளது.

ஜனவரி 28 ஆம் திகதித் தரவுகளின் அடிப்படையில் 59 ஆயிரத்து 425 ஒட்டுமொத்த தொற்றாளர்களுடன் உலக அளவில் சிங்கப்பூர் 93 ஆவது இடத்திலுள்ள அதேவேளை, இலங்கை 61 ஆயிரத்து 45 தொற்றாளர்களுடன் 91 ஆவது இடத்திலுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்கள் இவ்வாறு முன்னெப்போதுமில்லாத வகையில் அதிகரித்துக்கொண்டு செல்லும் நிலையில் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்திவரும் சிறந்த நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 10ஆவது இடம் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் கொவிட்19 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் மற்றும் பரிசோதனை சதவிகிதங்களை அடிப்படையாகக் கொண்டு ஆஸ்திரேலிய நிறுவனம் நடத்திய ஆராய்வுகளின் பிரகாரமே இலங்கைக்கு 10 ஆவது இடம் கிடைத்துள்ளது.

கொவிட்19 வைரஸ் தொற்றை சிறந்த முறையில் கட்டுப்படுத்திவரும் நாடுகளில் நியூசிலாந்துக்கு முதலிடம் கிடைத்துள்ளது. 100 நாடுகளை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்டுள்ள இந்தப் பகுப்பாய்வில் வியட்நாம், தைவான் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடித்துள்ளன.

இந்த விடயத்தில் ஆஸ்திரேலியா 8ஆவது இடத்திலும் இலங்கை 10ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன. அதிகமான தொற்றாளர்கள் கண்டறியப்படும் அமெரிக்கா 94ஆவது இடத்தில் உள்ளது. இந்தோனேசியாவும் இந்தியாவும் முறையே 85 மற்றும் 86ஆவது இடங்களில் உள்ளன. இந்த நிறுவனம் சீனாவை இந்தப் பட்டியலில் தரப்படுத்தவில்லை. சீனாவின் உண்மையான தரவுகளை பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல் நிலைமையால் இவ்வாறு தரப்படுத்தவில்லை. பெரிய நாடுகளைவிட சிறிய நாடுகள் கொவிட்19 வைரஸை மிகவும் திறம்படக் கையாண்டுள்ளன என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (து-இ)

குருந்தூர் மலை விவகாரம்:

## இந்து சமயப் பேரவையில் அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 1

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக இந்து சமயப் பேரவையின் அவசர கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது என அதன் தலைவர் சிவசக்திகிரீவன் அறிவித்துள்ளார்.

'அந்நியர் ஆட்சிக்காலத்திலிருந்து இந்து ஆலயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. அழிக்கப்பட்ட ஆலயங்களின் சுவடுகள் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களை மறுசீரமைக்க எந்த அரசுகளும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அந்த இடங்களில் விகாரைகள் இருந்தன என்பதை நிரூபிக்க பாடுபட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமே குருந்தூர் மலை விவகாரம்' என்று சிவசக்திகிரீவன் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தடுத்து நிறுத்துவது தொடர்பில் ஆராயும் கூட்டத்துக்கு நிர்வாக சபை உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன் இந்த அநீதியை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வுள்ள சட்டத்தரணிகள் மற்றும் இந்து மத ஆர்வலர்களையும் கூட்டத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் 076 1688277 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இந்தக் கூட்டத்துக்கான வருகையை உறுதிப்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ.இ)



## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்!

வவுனியா, பெப்.1

வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயத்தின் 184 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கற்றல் உபகரணங்கள் இன்றி பாடசாலை செல்லாதிருந்த பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கே, வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் அதிபர் செல்லத்துரை பவேந்தன் மற்றும் அரவிந்தகுமார் பங்கையாசனன் ஆகியோரின் ஏற்பாட்டில், இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, பொருண்மியம் நலிந்த மாணவர்களின் கல்விக்கான உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இந்த மாணவர்களுக்கு பெருமாள் சிவகுமார் சேவைகள் அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ற-222)

## தடுப்பூசி ஏற்றியவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள்

மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவிப்பு

கொழும்பு,பெப்.1

தடுப்பு மருந்து பெற்றவர்களும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தொற்று நோயியல் மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனாத் தடுப்பூசி 100 வீதம் பாதுகாப்பைத் தராது.

கொரோனாத் தடுப்பூசி பெற்றவர் வாழும் பகுதியில் தொற்றுப் பரவும் நிலைமை ஏற்பட்டால் அவரையும் பரிசோதனைக்கு உட்படுத்தவே நேரிடும் - என்றார். (ஐ-இ)

## டொமினிக் ஜீவாவுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, பெப்.1

மறைந்த பிரபல எழுத்தாளரும், மல்லிகை சஞ்சிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவா கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதியாகியுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 28ஆம் திகதி தனது 93 ஆவது வயதில் அவர் உயிரிழந்திருந்தார். இந்நிலையில், அவரின் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் வெளியாகிய பரிசோதனை முடிவில் அவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இதனிடையே டொமினிக் ஜீவாவின் உடல் நேற்று மாலை பொரளையில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமையத் தகனம் செய்யப்பட்டுள்ளது. (வ-இ)

# பங்கஸ் நோய் காரணமாக நெற்செய்கை பாதிப்பு




கிளிநொச்சி,பெப்.1


**தொடர்மழை காரணமாக நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு சேதமடைந்த நிலையில், தற்போது மஞ்சள் என்னும் பங்கஸ் நோய் தாக்கி, நெல் மணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி கல்மடுக்குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள பலரது வயல்கள் பங்கஸ் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றன.

அறுவடைக்கு தயாராகிவரும் நிலையில் இவ்வாறான ஒரு வகை நோயால் நெற்செய்கை முழுதும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் 501 என்ற நெல்லினத்தில் இப்படியான ஒரு நோய்த்தாக்கம் ஏற்பட்டு அந்த நெல்லினமே அழிந்து போனது. அதே போன்று தற்போது சம்பா இனத்துக்கும் இந்த நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படும் நோய்த் தாக்கம் தொடர்பில் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் எந்தவிதமான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர். (ஐ-113)

## தந்தத்துடன் கைதானோர் மறியலில்



முல்லைத்தீவு, பெப். 1

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளிக்காட்டுப் பகுதியில் காட்டுயானையைக் கொன்று அதன் இரண்டு தந்தங்களையும் எடுத்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட முள்ளியவளையைச் சேர்ந்த இருவரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு விசேட பெருங்குற்றப்பிரிவால் கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்தும் யானைத் தந்தம், சட்டவிரோத துப்பாக்கி, கோடாலி, மற்றும் சிறிய வாள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர். (ஓ.19)

## அரச ஊழியர்களை விசாரிக்க சிறப்பு ஆணைக்குழு

கொழும்பு,பெப்.1

அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்பட்ட அரச ஊழியர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ஜனாதிபதி, விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற பழிவாங்கல்கள் தொடர்பிலேயே விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இந்த விசாரணைக்குழுவில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளான தம்மிக பிரியந்த சமரகூன் ஜெயவர்தன, கேம குமுதினி விக்கிரமசிங்க மற்றும் நீதிபதி ரத்னபிரிய குருசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-இ)

## மேய்ச்சல் தரை விவகாரம்; மட்டக்களப்பில் தொடர்கின்றன கைதுகள்

மட்டக்களப்பு, பெப்.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மேய்ச்சல் தரைகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் அந்த மேய்ச்சல் தரைகளில் மாடுகளை மேய்க்கச் செல்லும் பண்ணையாளர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகமாகவே இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த பகுதிகளில் மாடுகளை மேய்க்கச் சென்ற நான்கு பண்ணையாளர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு. மண்முனை தென்மேற்கு மற்றும் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கச்சக்கொடி சுவாமிமலை கிராம அலுவலர் பிரிவில் உள்ள கெவிளியாமடு காத்தார் அல்லிச்சேனை பகுதியில் உள்ள மேய்ச்சல் தரையில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்த பொலிஸார் அவர்களை பிணையில் விடுவித்துள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப)

## 24 மணிநேரத்தில் 1,135 பேர் பயணம்

கொழும்பு, பெப்.1

இலங்கையில் கடந்த 24 மணிநேரத்தில் 39 விமான சேவைகள் ஊடாக ஆயிரத்து 135 பேர் பயணங்களை மேற்கொண்டுள்ளனர் என்று கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 8.30 அளவில் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதிக்குள், இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கொரோனாத் தொற்று அச்சத்தால் 681 பேர் 20 விமானங்களின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

இதேபோன்று தொழில் நிமித்தம் கட்டார் சென்றிருந்த நிலையில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர் எனக் கூறப்படும் 293 பேரும் நாடு திரும்பியுள்ளனர். இதற்கமைய டுபாயிலிருந்து 83 பேரும் அபுதாபியிலிருந்து 77 பேரும் பாகிஸ்தானிலிருந்து 39 பேரும் பங்களாதேஷிலிருந்து 34 பேரும் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (வ-இ)

# அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்!

*தொற்றுநோய் மருத்துவ நிபுணர் வலியுறுத்து*

கொழும்பு, பெப்.1

இலங்கையில் தற்போது போடப்படுகின்ற கொரோனாத் தடுப்பூசி, திறன்மிக்க தடுப்பூசியாகும். அதை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தொற்று நோய் மருத்துவ நிபுணர் மருத்துவர் கேசவன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை முழுவதும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு



வருகிறது அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இது ஒரு பாதுகாப்பான தடுப்பூசியாகும். ஆகையால் பக்கவிளைவுகள் மிக மிகக் குறைவு. இது மிகவும் திறன்மிக்க தடுப்பூசியாகும். எனவே பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ம-இ)

## ஐ.நாவின் அபிப்பிராயத்துக்கு தற்போதைய அரசே பொறுப்பு!

**கூறுகிறார் ஐ.ம.சக்தியின் அலவத்துவல எம்.பி**

கொழும்பு, பெப்.1

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கொண்டிருக்கும் தவறான அபிப்பிராயத்துக்கு தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தற்போதைய ஆட்சியில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்பதை எடுத்துக் கூறியுள்ளார்.

சர்வதேச ஊடகங்களில் இத்தகைய செய்திகள் வெளிவருவதால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில், இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இதுபோன்ற தவறான எண்ணங்களால் தான் இலங்கை அபாயத்தை எதிர்கொள்கிறது -என்றார். (ம-இ)

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.1
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின் தடைப்படவுள்ளது.
அதன்படி, நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். மாவட்டத்தில் இணுவில் கந்தசாமி கோவில், இணுவில் மேற்கு, பாலாவோடை, பெரிய பொக்கனை, வாதரவத்தை, பத்தானை, தாவடி, மானிப்பாய் வீதி, தாவடி இந்துமயானம் ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிப்பிலவு, செல்வநகர், சமணன்குளம் கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், வீரபுரம், சின்னசிப்பிக்குளம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.



# குருந்தூர் அகழ்வாராய்ச்சி; படையெடுக்கும் பிக்குகள்!

## பாகுபாடு காட்டும் பொலிஸார்

முல்லைத்தீவு, பெப். 1
சர்ச்சைக்குரிய குருந்தூர் மலை அகழ்வாராய்ச்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்கு பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தேரர் தலைமையிலான பிக்குகள் குழுவொன்று நேற்று முன்தினம் சென்றுள்ளது.
அவர்கள் படையதிகாரிகளுடன் இணைந்து அவற்றைப் பார்வையிட்டுள்ளனர்.
குருந்தூர் மலைக்கு தமிழ் அரசியல்வாதிகள் செல்வதற்குப் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். ஊடகவியலாளர்களை அனுமதிக்கவும் மறுத்திருந்தனர். ஆனால் பிக்குகள் செல்வதற்கு எந்தத் தடையையும் ஏற்படுத்தவில்லை. அதேவேளை அங்கு வந்த பிக்குகளை ஒளிப்படம் எடுக்க ஊடகவியலாளர்களுக்குப் பொலிஸார் இடையூறுகளை விளைவித்துள்ளனர். (ஒ.19)

# பெரமுனவின் பேராளர் மாநாடு

வவுனியா.பெப்.1
பொதுஜன பெரமுனவின் பேராளர் மாநாடு வவுனியா நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயரத்தின கேரத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமதிபால, வவுனியா நகரசபை உபதவிசாளர் குமாரசாமி, தெற்கு சிங்களபிரதேசசபை உபதவிசாளர் வசந்த ராஜகருணா, விளையாட்டுத் துறை அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் பாலித்த மற்றும் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-110)

# நூல் வங்கி திட்டத்தினூடாக நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1
என். செல்வராஜாவின் நூல் வங்கித் திட்டத்தினூடாக சிறுவர் இல்லங்களுக்கு நூல்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் மிருசுவில் ஹொலி பெமிலி கொன்வென்ட் சிறுவர் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
குமரன் பதிப்பகத்தினூடாக வழங்கப்பட்ட தமிழ் நூல்கள், மற்றும் புக்ஸ் அப்ரோட் நிறுவனத்தினூடாக வழங்கப்பட்ட ஆங்கில நூல்கள் என்பன என். செல்வராஜாவால் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த நூல்கள் இத் திட்டத்தில் இணைக்கப்படும் சிறுவர் இல்லங்களுக்கு குறிப்பிட்ட கால அளவில் சுழற்சி முறையில் பரிமாறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

# அமைச்சர் விதுரவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

## குருந்தூர்மலை விவகாரத்தில் அடுத்த கட்ட நகர்வு



முல்லைத்தீவு, பெப். 1
முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையிலிருந்த வழிபாட்டு அடையாளங்கள் காணாமலாக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும். அத்துடன் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் அவரோடு சேர்ந்தவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்படும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
குருந்தூர் மலையிலிருந்த சூலம் உடைக்கப்பட்டமை தொடர்பாக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் நேரிலே சென்று பார்வையிட்டனர். பின்னர் து.ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.
அதனைத் தொடர்ந்து குருந்தூர்மலைக்கு பொலிஸாருடன் சென்று உடைக்கப்பட்ட தடயங்களையும் து.ரவிகரன் காண்பித்திருந்தார்.
அங்கே வழிபாட்டு அடையாளங்கள் உடைக்கப்பட்டதென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்திலோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்திலோ வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளோம்.
முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தாலே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறி செயற்பட்டதன் காரணமாக, நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றிலே தாக்கல் செய்வோம். அந்த வழக்கை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் அவரோடு சேர்ந்தவர்களுக்கும் எதிராகத் தாக்கல் செய்வோம் - என்றார். (ஒ.246)

# சம்பள உயர்வு தொடர்பில் சபையில் சர்ச்சை கிளம்பும்

கொழும்பு, பெப். 1
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.
மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஜனாதிபதியும் இது குறித்து அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். ஆனால் அவரின் உத்தரவைக்கூட கம்பனிகள் ஏற்பதாகத் தெரியவில்லை.
தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே கம்பனிகளை ஒரு நிலைக்குக் கொண்டுவரமுடியும். நாம் மௌனமாக இருக்கிறோம் என நினைத்துவிட வேண்டாம். சம்பள விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம். நாம் விழிப்பாக இருந்திருக்காவிட்டால், தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டு இந்நேரம் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பார்கள். அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக அறிவித்துவிட்டே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் மொட்டுக் கட்சிக்கு வாக்களித்த மக்களே இன்று அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்கின்றனர்- என்றார். (த-இ)

# 1000 ரூபா வழங்காவிடின் வேறு வடிவில் போராட்டம்



## வடிவேல் சுரேஷ் எம்.பி. எச்சரிக்கை

மலையகம்,பெப்.1
“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும். இல்லையேல் இம்முறை போராட்டமானது வேறு வடிவில் அமையும்” என்று இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை விடுத்தார்.
நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் எமது தொப்புள்கொடி உறவுகளைத் தொடர்ச்சியாக ஏமாற்றியுள்ளன. கடந்த நல்லாட்சியின்போதும் சம்பள விடயத்தில் துரோகம் இழைக்கப்பட்டது. அந்த சாபத்தால் தான் ஐக்கிய தேசியக் கட்சி இன்று அழிந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
ஆயிரம் ரூபா அவசியம். சம்பள நிர்ணயசபை 6 ஆம் திகதி கூடவுள்ளது. அதன்மூலம் ஆயிரம் ரூபா பெறுவதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். ஏனைய தொழிற்சங்கங்களும் வழங்கும் என நம்புகின்றோம் - என்றார். (ஐ-இ)

# நாவலர் வீதியை அகலிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.1

**யாழ்ப்பாணம், நாவலர் வீதியை அகலிக்கும் யோசனை ஒன்றை வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரம் முன்வைத்துள்ளார்.**

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போதே அவர் இந்த யோசனையை முன்வைத்தார்.

நல்லூர் ஆலய வருடாந்தத் திருவிழாக் காலத்தில், யாழ்ப்பாணம், நாவலர் வீதியூடான போக்குவரத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் அங்கு போக்குவரத்து நெரிசல்களும் ஏற்படுகின்றன. எனவே அந்த வீதி அகலிக்கப்படவேண்டும். இதற்கு ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். குறித்த வீதியை மூன்று கட்டங்களாகச் சீரமைக்க முடியும் என்று ஜெயசேகரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது. நாவலர் வீதியின் ஒரு பகுதி யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டதாகவும், மற்றை பகுதி நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டதாகவும் இருப்பதால் யாழ்ப்பாணம் மாநகர சபை அது தொடர்பில் கவனமெடுத்து, இரண்டு பிரதேச செயலகங்களையும் ஒழுங்குபடுத்தி குறித்த வீதியைச் சீரமைக்க திட்டமிடவேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுவால் தெரிவிக்கப்பட்டது. (ப)

# துறைசார்ந்த கட்டங்களாக ஒருங்கிணைப்புக் கூட்டம்!

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்.மாவட்டத்துக்கான இந்த வருடத்தின் முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது நாட்டில் நிலவி வரும் கொவிட்19 நோய்த் தொற்று காரணமாக இக் கூட்டம், துறை சார்ந்து 3 கட்டங்களாக நடைபெறுமென மாவட்டச் செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது நாளை முற்பகல் 9.30 மணி தொடக்கம் 10.45 மணி வரை வீடமைப்பு, விவசாயம், வர்த்தகம், தொழிற்றுறை மற்றும் கூட்டுறவு, உயர்கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகள் சார்ந்தும், 10.45 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை மின்சாரம், நீர் விநியோகம், நகர அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும். தபால், விசேட திட்டங்கள், சமுர்த்தி ஆகிய துறைகள் சார்ந்தும், மதியம் 12 மணி தொடக்கம் 1 மணி வரை அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள் ஆகிய துறை சார்ந்தும் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தொடர்பான கூட்டத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் ஆளுகைக்குட்பட்ட சந்தைகளின் குத்தகைதாரரின் பிரதிநிதி ஒருவரையும் கலந்துகொள்ள ஆவனசெய்யுமாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# நயினாதீவு ஸ்ரீகணேசாவுக்கு 110 அடி கட்டடமே வேண்டும்

## பாடசாலைச் சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாணம், நயினாதீவு ஸ்ரீகணேசா மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சால் அமைக்கத் திட்டமிடப்பட்ட 110 அடி நீளம் கொண்ட கட்டடத்தை, மாற்றங்கள் எதுவுமின்றி அமைத்துத் தரவேண்டும் என்று பாடசாலை சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேலணைப் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

ஸ்ரீகணேசா மகா வித்தியாலயத்துக்கு என 110 அடி நீளமும், 25 அடி அகலமும் கொண்ட,2 மாடிக் கட்டடத்தை அமைக்க கல்வி அமைச்சு முடிவு செய்தது. அது தொடர்பில் கடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டன. எனினும் இன்று வரை கட்டடம் கட்டப்படவில்லை. தற்போது குறித்த கட்டடத்தின் நீளத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கட்டடத்தின் நீளத்தை 70 அடியாகக் குறைத்துள்ளனர். எமது பாடசாலையில் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. தற்போதும் எமது மாணவர்கள் அந்தக் கட்டடத்திலேயே கல்வி கற்று வருகின்றனர்.

பாடசாலைக்கு கட்டடத்தின் தேவை உள்ளது. எனவே குறித்த 110 அடி நீளமான இரண்டு மாடிக் கட்டடத்தை பாடசாலையில் அமைப்பதற்கு ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர் ஸ்ரீகணேசாவில் 110 அடி நீளத்தில் குறித்த கட்டடம் அமைக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளரைப் பணித்தார். (ப-319)

# பயணிகளுடன் டீசல் நிரப்பத் தடை

யாழ்ப்பாணம், பெப்.1

பயணிகள் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள், பயணிகளுடன் சென்று டீசல் நிரப்புவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது. யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது, தனியார் சிற்றூர்திகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றும் சிற்றூர்திகள், பயணிகளுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்று, டீசல் நிரப்புகின்றன. இதனால் பெரும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பில் சிற்றூர்திகள் உரிமையாளர் சங்கத்திடம் வினவப்பட்டது. பதிலளித்த சங்கத்தினர் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும், இனிமேல் அவ்வாறு நடைபெறாது என்று உறுதியளித்தனர். சிற்றூர்திகள் பயணிகளுடன் டீசல் நிரப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும், இனி அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்றும் ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது. (ப)

# யாழ். நகரை சுற்றும் பஸ்

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாண நகர்ப்புறத்துள் பயணிக்கத்தக்க விதத்தில் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே இவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் தவிர ஏனைய வீதிகளில் உள்ள மக்கள் தமக்கான பேருந்துச் சேவையைப் பெற்றுக் கொள்வதில் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே அவர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக யாழ் நகரின் சகல பகுதிகளையும் உள்ளடக்கி சேவையில் ஈடுபடும் பேருந்துச் சேவையை ஏற்படுத்த வேண்டும் என்று கூட்டத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் கோரிக்கை குறித்து ஆராயப்பட்டது.

குறித்த சேவையில் தனியார் பேருந்துகளையா, அல்லது அரச பேருந்துகளையா ஈடுபடுத்துவது என்பது தொடர்பில் ஆராயப்பட்டது. இறுதியில் பேருந்துச் சேவையை நடத்துவதற்கு ஒருங்கிணைப்புக் குழு இணக்கம் தெரிவித்தது. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# வீதி சீரமைக்கப்பட்டாலும் பாதுகாக்கப்படும் மரங்கள்

கிளிநொச்சி, பெப்.1



அக்கராயன் மருத்துவமனைக்கு முன்பாக உள்ள வீதி சீரமைக்கப்படுகின்ற போதும், அங்குள்ள மரங்கள் அழிவடையாது பாதுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டில் அக்கராயன் பிரதேசத்தில் மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டபோது, குறித்த பகுதியில் உள்ள மரங்களை தறிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. எனினும், அக்கராயன் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியாக இருந்த எஸ்.கோபாலபிள்ளை குறித்த மரங்களைத் தறிப்பதற்கு அனுமதிக்கவில்லை. தற்போது வீதி சீரமைக்கப்படுகின்ற நிலையில் அந்த மரங்கள் தறிக்கப்படாது பாதுகாக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. அக்கராயன் கிராம அலுவலர் ப.சபாரட்ணம், கரைச்சி பிரதேச சபையின் அக்கராயன் வட்டார உறுப்பினர் சு.தயாபரன் ஆகியோர் வீதிச் சீரமைப்பில் ஈடுபடுபவர்களிடம் மரங்களைச் சேதப்படுத்தாது வீதியைச் சீரமைக்குமாறு விடுத்த கோரிக்கைக்கமைவாக மரங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரி2)



## பாப்பரசரின் பிரதிநிதி மன்னாருக்கு பயணம்!

மன்னார், பெப்.1

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதி நிதி அருட்கலாநிதி பிறையன் உடைக்வே ஆண்டகை, மன்னார் மறைமாவட்டத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்திருந்தார்.

காலை 5.30 மணியளவில் மன்னார் நகரை வந்தடைந்த பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதிநிதி, மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச் சொரூபத்தில் ஆசி பெற்றார்.

தொடர்ந்து வருகை தந்த பிரதிநிதியை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மன்னார் மாவட்டச் செயலர் நந்தினி ஸ்ரான்லி டிமேல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் வரவேற்றனர். (ஐ-56)

# ஜனாதிபதி ஆணைக்குழு மீது தமிழருக்கு நம்பிக்கையில்லை

## கலையரசன் எம்.பி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.1

**பாதுகாப்புச் செயலாளராக இருந்து போரை வழி நடத்திய ஜனாதிபதியால், மனித உரிமை தொடர்பான அறிக்கையை ஆராய ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பது வெறும் கண்துடைப்பாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி ஆணைக்குழுவை தமிழ் மக்கள் ஏற்க முடியாத சூழல் இருக்கின்றது. ஏனென்றால்போரை முடிவுக்குக் கொண்டு வந்து 12 ஆண்டுகள் ஆகியும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவில்லை. அது மாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் சபையால் பரிந்துரைக்கப்பட்ட ஏதாவது ஒன்றை அரசு நிறைவேற்றி இருக்கின்றதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது.

அதனடிப்படையில் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமையப் பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் எழப்போகும் நெருக்கடியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே இலங்கை அரசால் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜனாதிபதி ஆணைக்குழு மீது தமிழ் மக்களாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால் அரசின் உயர் அதிகாரிகளாக நியமித்து இருப்பவர்கள் கடந்தகால போர்களில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள் போர்க்குற்றவாளிகள் என இனங்காணப்பட்டவர்கள் பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழி நடத்திய ஜனாதிபதியால் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டிருப்பதை வெறும் கண்துடைப்பாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர். எனவே போர்க்குற்ற விடயத்தில் சர்வதேச ரீதியாக முன்னெடுக்கும் விடயங்கள் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டும் உள்ளக ரீதியான பொறிமுறை என்கின்ற விடயத்தை நடைமுறைப்படுத்துவது தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயற்பாடுகளாகவே அமையும் - என்றார். (ப)

## குப்பை கொட்டியோருக்கு எதிராக வழக்குப் பதிவு!!

சாவகச்சேரி பெப்.1

சாவகச்சேரி நகரசபையின் நகர எல்லைக்குட்பட்ட வீதியில் குப்பை கொட்டியவர்களுக்கு எதிராக சாவகச்சேரிப்பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

நகரப் பகுதியின் வீதியோரங்களில் குப்பை போடவேண்டாம் என சாவகச்சேரி நகர சபையினரும், சுகாதாரப் பகுதியினரும் ஒலி பெருக்கி மூலம் அனைத்து வட்டாரங்களுக்கும் அறிவித்துள்ளனர்.

ஆனால் இந்தப் பகுதிகளில் குப்பை போடப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அந்த வீதிக்குச் சென்ற பொலிஸார், வீதியின் பல இடங்களில் குப்பை போடப்பட்டிருப்பதைக் கண்டு வீதியோரத்தில் குப்பை கொட்டிய குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

நகரசபையின் வாகனம் தினமும் குப்பை எடுக்க வருவதால் வழமை போன்று தாம் வீதியோரத்தில் குப்பை கொட்டினர் எனவும், குப்பை வீதியில் போடக்கூடாது என்று அறிவிக்கப்படமை தமக்குத் தெரியாது எனவும் குடியிருப்பாளர்கள் இதன் போது தெரிவித்துள்ளனர். (ற-9)



## காந்தி நினைவு தினம் யாழில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

மகாத்மா காந்தியின் 73ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக உள்ள அவரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் கே.பாலசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், யாழ்ப்பாணம் மாநகர முதலவர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (வ-20)

## நிதி மோசடி ஒருவர் கைது

கொழும்பு, பெப்.1

பொருள்களை விற்பனை செய்வதற்கான இணையவழி விளம்பரங்கள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் வெலிகமவில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 29 வயதுடைய நாரஹேன்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். சந்தேக நபருக்கு பல்வேறு தேசிய அடையாள அட்டை எண்களின் கீழ் பல வங்கி கணக்குகள் உள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் முறையிட பொதுமக்கள் 0718 591753 என்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரின் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (வ-இ)

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.1

கொழும்பு - மினுவாங்கொடைப் பிரதான வீதியில் ஏக்கலைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். வான் ஒன்று வீதியை விட்டு விலகி, பஸ் தரிப்பிட சுவரொன்றுடன் மோதியதில் விபத்து நடைபெற்றுள்ளது. வானில் பயணித்த, சீதுவ, ரத்தோலுகம மற்றும் பமுனுகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் ராகமை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-இ)

# சட்டவிரோத அகழ்வால் நிலத்தடி நீருக்கு பாதிப்பு

## புத்துவெட்டுவான் மக்கள் குற்றச்சாட்டு

புத்துவெட்டுவான் கிராமத்தில் இடம்பெறும் தொடர் மணல் அகழ்வால், கோடை காலங்களில் நிலத்தடி நீர் கீழ் இறங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புத்துவெட்டுவான் கிராமத்தில் தொடர்ச்சியாக அனுமதியற்ற மணல் அகழ்வு இடம்பெறுகிறது. இதனால் கோடை காலத்தில் நிலத்தடிநீர் கிழிறங்குகிறது. கிராமத்தில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிப் போகும். இதனால் எமது வாழ்வாதாரமான விவசாயம் பாதிக்கப்படும். இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க பலமுறை கோரிக்கை விடுத்தும் இது வரை இதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. கிராமத்தில் மூன்று அடி ஆழமாக இருந்த சிற்றாறுகளான வடகாடு ஆறு, வன்னிவிரிஞ்சான் ஆறு மற்றும் கலிங்கு ஆறு என்பன இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக பத்து அடிக்கும் மேல் ஆழமாக்கப்பட்டுள்ளது. முன்னர் ஆறுகளைக் கடந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் இருக்கும் வயல் நிலக்களுக்குச் சென்று வந்த கிராம மக்கள் தற்போது இரண்டு கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்தே வயல் நிலங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த மணல் கொள்ளையர்களிடம் இருந்து எமது கிராமத்தைக் காப்பாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ஐ-ரி)

# இன்றைய நாள்





**மேடம்:** மதிப்பு, மரியாதை உயர்வதால் மனதில் மகிழ்ச்சி நிலவும். பல நாள் எதிர்பார்த்த உயர்வு வரும். திட்டங்கள் தீட்டுவீர்கள். பணியிடத்தில் பாராட்டின் அடையாளமாக சிறு பரிசு வரும்.



**இடபம்:** பிள்ளைகள் இன்று புதிய விஷயங்களை கற்பார்கள். சொத்து விற்பனை மூலம் ஒரு பெரும் தொகை கிடைக்கலாம். பணியிடத்தில் ஏற்பட்ட சந்தேகங்களுக்குத் தீர்வு வரும்.



**மிதுனம்:** தேவையின்றி கடன் வாங்குவதை தவிர்க்கப்பாருங்கள். அளவாக பழகுங்கள். விட்டு கொடுத்து செல்ல வேண்டி வரும். மற்றவர்கள் செய்த உதவிக்கு இன்று நன்றி சொல்வீர்கள்.



**கடகம்:** நெகிழ்ச்சி அடையும் படியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். சுபநிகழ்ச்சிகளில் சந்தோஷமாக கலந்து கொள்வீர்கள். ஆதரிக்க மாட்டார்கள் என்று நினைத்தவர்களின் அன்பு கிடைக்கும்.



**சிம்மம்:** மற்றவர்களின் விலை உயர்ந்த பொருளை கவனமாக கையாளுங்கள். பெரிய குறிக்கோள்களை தீர்மானித்து புத்தி சாலித்தனமாகச் செயல்படுவீர்கள்.



**கன்னி:** இன்று சொந்த பந்தங்களிடம் இருந்து அன்பளிப்புக் கிடைக்கும். பழைய மின்னணு சாதனங்களைக் கொடுத்து புதியது வாங்குவீர்கள். வாகன சேர்க்கை ஏற்படும்.



**துலாம்:** ஆர்வமில்லாதிருந்த விஷயங்களில் புதிய ஆர்வம் பிறக்கும். திட்டமிட்டுச் செய்த யுக்திகளால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். தடைப்பட்ட அலுவலகப் பணி தொடரும்.



**விருச்சிகம்** அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். பயம் நீங்கும். அதிகாரப் பதவியில் இருப்போரிடம் இருந்து நல்ல செய்தி வரும். வெளியூர் பய ணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம்.



**தனுசு:** வரவு கூடும். நண்பர்களுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டாம். புரியாதிருந்த பல விஷயங்கள் விளங்கும். நல்லவர்கள் உதவுவர். சமீபத்தில் சந்தித்த பழைய நட்பால் நன்மை ஏற்படும்.



**மகரம்:** பொறாமைக்காரர்களால் ஏற்பட்ட தொல்லைகள் தீரும். லாபம் வரும். ஒப்பந்தம் ஒன்றின் மூலம் நன்மை அடைவீர்கள். பொருளாதார சிக்கல்கள் விடுபட நடவடிக்கை எடுப்பீர்கள்.



**கும்பம்:** சட்டதிட்டத்தை மீற வேண்டாம். குடும்பத்தில் புரிதல் ஏற்படும். குழப்பங்கள் தீரும். கவனமாகச் செயல்பட்டு காத்துக் கொள்வீர்கள். உடற்பயிற்சியில் கவனம் அதிகரிக்கும்.



**மீனம்:** உழைப்புக்கேற்ற பலன்கள் கிடைக்காத ஏக்கம் ஏற்படும். இன்று நல்ல செய்தி ஒன்று வரும். உங்களின் புகழ் கூடும். ஆரோக்கிய நலனில் அக்கறை எடுப்பீர்கள். எண்ணம் நிறைவேறும்.

# மத நம்பிக்கை, கலாசார மரபுகளுக்கு இலங்கை அரசு இடமளிக்கவேண்டும்

## மீண்டும் வலியுறுத்தியது அமெரிக்கா



**கொழும்பு, பெப்.1**
**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் மரணங்களின் போது ஒவ்வொரு சமூகங்களினதும் மரணங்கள் தொடர்பான மத நம்பிக்கை மற்றும் கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகம், தனது டுவிற்றர் தளத்தினூடாக இலங்கை அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சர்வதேச மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களுக்கு அமைய இந்த நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். மேலும் தமது அன்புக்குரியவர்களுக்கு மத நம்பிக்கைகளுக்கு இணங்க விடை கொடுக்கும் உரிமை இதனூடாக மக்களுக்குக் கிடைக்கும். ஆகவே ஒவ்வொரு சமூகங்களினதும் மரணங்கள் தொடர்பான மத நம்பிக்கை மற்றும் கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும்- என்றுள்ளது. (ப)

# நுவரெலியாவில் நிலநடுக்கம்

கொழும்பு, பெப்.1
நுவரெலியா, வலப்பனை பிரதேசத்தில் சிறியளவிலான நிலநடுக்கம் ஒன்று நேற்றுக் காலை பதிவாகியுள்ளது என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் 2.0 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது என அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சுயதனிமையில் உள்ளோரை கண்காணிக்க சிவிலில் பொலிஸார்

கொழும்பு, பெப்.1
சுயதனிமைப்படுத்தலில் உள்ளோர் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய முறையில் கடைப்பிடிக்கிறார்களா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று ஊடக பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் சிலர் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறி வெளியே சுற்றித் திரிகின்றனர் எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த நடைமுறை நேற்று முதல் அமுலாகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# உக்ரைன் பயணிகள் இலங்கையில் மோதல்!

கொழும்பு, பெப்.1
**இலங்கை வந்துள்ள உக்ரைன் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் சிலர் மோதிக்கொள்கின்ற காணொலி தற்போது சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.**

காலி-பெந்தோட்டையிலுள்ள தாஜ் விடுதியில் தங்கியிருந்த உக்ரைன் சுற்றுலாப் பயணிகளே இவ்வாறு மோதிக் கொண்டனர்.

கொரோனாத் தொற்று காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில், அண்மையில் உக்ரைனில் இருந்து சுற்றுலாப் பயணிகள் கட்டம் கட்டமாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# துறைமுகக் குழப்பத்தை பகிரங்கப்படுத்த வேண்டும்!

கொழும்பு, பெப்.1
துறைமுகம் தொடர்பான நிலைப்பாட்டை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டுமே தவிர, ஒரு சில அமைச்சர்கள் வெளியிடும் கருத்துக்களை செவிமடுப்பது தேவையற்றது என பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

அஜித் நிவாட் கப்ரால், தயா ரத்நாயக்க ஆகியோர் இந்த விடயத்தில் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வருகின்றனர். துறைமுக விடயத்திலுள்ள நியாயத்தை ஜனாதிபதி நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். கிழக்கு முனையத்தை வழங்கினாலும் மேற்கு முனையத்தை வழங்கினாலும் இவையனைத்தும் இலங்கைக்குரியன. மஹிந்த ராஜபக்சவோ, கோத்தாபய ராஜபக்சவோ, ரணில் விக்ரமசிங்கவோ யார் வழங்கினாலும் அதில் வேறுபாடு இல்லை - என்றார். (ந-இ)

# கொரோனாக் காவு மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, பெப்.1
கொரோனா உயிரிழப்புக்கள் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. நாட்டில் நாளாந்தம் 750 வரையில் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வைரஸ் பரவல் வழிமுறைகளை முறையாக மதிப்பீடு செய்யாவிட்டால் எதிர்வரும் நாள்களில் நாளாந்தம் ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய நிலைமையும் ஏற்படும். எதிர்காலத்தில் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். குறிப்பாக மேல் மாகாணத்துக்கு வெளியில் மரணங்கள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்றும் அந்த சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

# கோத்தா அரசுக்கு எதிரான ஜே.வி.பியின் ஆட்டம் ஆரம்பம்

## நாடு தழுவிய போராட்டம் இன்று



கொழும்பு, பெப்.1

கொழும்புத்துறைமுகத்தைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். திங்கட்கிழமை (இன்று) நாடு தழுவிய ரீதியில் போராட்டமும் முன்னெடுக்கப்படும் என்று ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்வதென்பது கொழும்புத் துறைமுகத்தையே விற்பனை செய்வதற்கு ஒப்பான செயலாகும். முதலீடு, குத்தகை என்ற போர்வையில் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு தாரை வார்ப்பதற்கே இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

நாட்டை ஆளும் அதிகாரத்தை மக்கள் 5 வருடங்களே இந்த அரசுக்கு வழங்கியுள்ளனர்.

ஆனால் தாங்கள்தான் நாட்டின் சொந்தக்காரர்கள் என்ற போர்வையில் ஆட்சியாளர்கள் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கும், பல்தேசியக் கம்பனிகளுக்கும் விற்பனை செய்துவருகின்றனர். இதற்கு இடமளிக்கக்கூடாது.

தேசிய வளங்களை விற்பனை செய்வதை தோற்கடிக்க வேண்டும். குறிப்பாக கொழும்புத்துறைமுகத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். திங்கட்கிழமை (இன்று) நாடு தழுவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும். நாட்டை நேசிக்கும் ஒவ்வொரு பிரஜைகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (வ-44)





# யாழ். நகரத்தில் திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும், போதைப் பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்காகவும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பிரதான நகரங்களில் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையிலேயே நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ப-20)

# தைப்பூசத்தில் திருப்பணிகள்



முல்லைத்தீவு, பெப்.1

தைப்பூச சுபவேளையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான முல்லைத்தீவு, குமாரபுரம் ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயத்தில் பல திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிற்பத்தேருக்கான அச்சுக் கோர்த்தல், சப்பரம் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நாள் வேலை, வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடல், தேர் முட்டிக்கான அடிக்கல் நடல் மற்றும் கொடி மரத்துக்கான அடிக்கல் நாட்டல், ஆலயத்தின் முன்வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நடல் மற்றும் அறநெறிப் பாடசாலையை ஆரம்பித்தல் போன்ற வேலைத்திட்டங்களே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டன. (ப)

# உள்நோக்கம் இல்லையெனின் தடுப்பூசியை வரவேற்கின்றோம்

## கூறுகின்றார் முன்னாள் எம்.பி. ரட்னாயக்க



வவுனியா, பெப். 1

இந்தியா இலங்கைக்குத் தடுப்பூசி வழங்கியமையில் உள்நோக்கம் இருக்குமானால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விமல் ரட்னாயக்க தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா எந்தவித பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் இலங்கைக்குத் தடுப்பூசி வழங்கியிருந்தால் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இலங்கைத் துறைமுகத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் தடுப்பூசியை இந்தியா வழங்கியிருக்குமாயின் அதனை நாங்கள் சாதகமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இதுபோன்ற செயற்பாட்டை இந்தியா மேற்கொள்ளக் கூடாது. இவற்றுக்கு இலங்கை அரசும் உடந்தையாக இருக்கக் கூடாது. என்றார். (து-110)

# இ.போ.சபையின் வருமானம் வீழ்ச்சி

கொழும்பு,பெப்.1

இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் சுமார் 40 மில்லியன் ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமையால் வருமானம் வீழ்ச்சியடைந்தது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைப் பிரிவு அதிகாரி வீரசூரிய தெரிவித்தார். அதனடிப்படையில், இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் 45 தொடக்கம் 80 மில்லியன் ரூபாவுக்கிடையில் காணப்படுகிறது. (க-இ)

# புதையல் தோண்டியோர் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு,பெப்.1

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 9 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில் 4 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 5 பேர் முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி உள்ளிட்ட பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ஐ-19)

# தனிமைப்படுத்தல் நிலையங்கள் விரைவில் அதிகரிக்கும்!!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.1

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ள இலங்கையர்களை தங்க வைப்பதற்காக தனிமைப்படுத்தல் நிலையங்கள் அதிகரிக்கப்படவுள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் பலாலியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் முப்படையினர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். புதிய வெளிநாட்டுப் பயணிகளை தனிமைப்படுத்த யாழில் புதிய தனிமைப்படுத்தல் நிலையம் நிறுவப்படவுள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையம் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்துக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் தேவையான அனைத்துப் பங்களிப்பையும் வழங்குகின்றன - என்றார். (ற-இ)

# 'ஜீவா' என்கிற பேராளுமை

■ சாந்தன்



டொமினிக் ஜீவா என்கிற பேராளுமையின் மறைவு துரதிருஷ்டவசமாக சில ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டிருந்தபோதும், இப்போதைய இந்த பௌதிக மறைவுங்கூடத் துக்கத்தைத் தருவதாகவே உள்ளது. ஜீவா அவர்களுடைய இலக்கியப் பங்களிப்புகளும் சாதனைகளும் இப்போது பலராலும் நினைவுகூரப்படுகின்றன.

பல்வேறு சுமைகள், தடைகள், புறக்கணிப்புகளைத் தாண்டித் தன்னையும் தான் வரித்த கொள்கையையும் நிலை நிறுத்திய வாழ்நாள் போராளி அவர். முற்றுமுழுதாக இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் என்றே அர்ப்பணிக்கப்பட்ட முழுமையான வாழ்வு அவருடையது.

ஜீவாவின் பங்களிப்பு ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டுமன்றி, ஒட்டுமொத்தத் தமிழிலக்கிய வரலாற்றிலும், இலங்கையின் இலக்கிய வரலாற்றிலும் கூடத் தவிர்க்க முடியாதது. தன் படைப்புச் சாதனைகளுக்கப்பால் 'மல்லிகை' மூலம் அவர் ஆற்றிய பணி பெரிது. 'மல்லிகை' புதிய படைப்பாளிகள் பலரை உருவாக்கியது, ஏலவே எழுதிக்கொண்டிருந்தோருக்குக் களம் அமைத்து ஊக்குவித்தது, பழைய படைப்பாளிகளைக் கனம் பண்ணியது. இப்பணி 'மல்லிகைப் பந்தல் ' வெளியீட்டகம் மூலம் மேலும் விகசித்தது.

சமதர்ம சித்தாந்தத்தை முற்றுமுழுதாக வரித்துக் கொண்ட அரசியல் ஜீவாவுடையது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர், அவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினர்.

எனினும் சித்தாந்த முரண்பாடுகளைக் கொண்டோரையும் இலக்கியவாதிகள் என்கிற ரீதியில் அரவணைத்து அன்பு செலுத்தியவர்.

இவை யாவற்றுக்குமப்பால், ஒரு தனிமனிதன் என்கிற முறையில், ஜீவாவின் உழைப்பு, ஒழுக்கம், எளிமை, பொறுமை, உறுதி, என்பவை என்னை எப்போதும் வியக்க வைத்தவை; எல்லோருக்கும் உதாரணமாக அமையக் கூடியவை. மூத்த இலக்கிய சகாவும், தோழரும், நண்பருமான ஜீவாவுக்கு என் அஞ்சலிகள். ■

---

# முஸ்லிம்களின் குரல்களும் ஜெனிவாவில் ஒலிக்குமா?

■ கணபதி சர்வானந்தா



புதிய அரசமைப்பில் முஸ்லிம் திருமணப் பிணக்குகளைத் தீர்க்கவென இலங்கை அரசமைப்புக்கூடாக உருவாக்கப்பட்ட ஹாதி நீதிமன்றம் தொடர்ந்து செயற்படுவதை இலங்கை அரசு விரும்பவில்லை எனவும் அதனை உடனடியாக நீக்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்த நிலையில், அந்தக் கருத்தை நிராகரிப்ப தைப் போல அமைந்துள்ளது நீதி அமைச்சரின் கருத்து.

முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவென இலங்கை அரசமைப்புச் சட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட ஹாதி நீதிமன்றத்தின் செயற்பாடுகள் புதிய அரசமைப்பிலும் தொடரும் என்றும் அது ஒருபோதும் நீக்கப்படாது என்றும் சிங்கள ஊடகத்துக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருப்பது மேற்குறிப்பிட்ட அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்தை நிராகரிப்பது போலத் தோன்றினாலும் அமைச்சர் சரத் வீரசேகரவின் பேச்சை நாம் இலகுவாகக் கடந்து செல்ல முடியாது. ஏனெனில் சரத் வீரசேகர சாதாரண ஒருவரல்ல. அவர் ஓர் அமைச்சர் என்பதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதேசமயம் தற்போதுள்ள அரசாங்கத்தின் அதி நம்பிக்கைக்குரியவரான முன்னாள் ஜே.வி.பி உறுப்பினரும் இந்நாள் அமைச்சருமான விமல் வீரவன்ச, அரச வைபவம் ஒன்றில் பேசும்போது 'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் தலைமையிலுள்ள அரசாங்கத்தாலேயே நாட்டுக்கு எதிராக எழுந்த சவால்கள் பலவற்றை முறியடிக்க முடிந்திருக்கிறது. மைத்திரி அரசின் போது முளைவிட்டெழுந்த சஹ்ரான் தலைமையிலான முஸ்லிம் பயங்கரவாதத்தைத் தலைதூக்க விடாது அவர்கள் நடவடிக்கைகளை முளையிலேயே இவர்கள் கிள்ளி யெறிந்திருக்கின்றனர்' என்று பாராட்டியுள்ளார். இருந்தும் அதற்குப் பின்னால் நடைபெற்ற சம்பவங்களும், முஸ்லிம்களுக்கு எதிரான விரோதப்போக்கு பற்றியும் அவர் எதுவும் குறிப்பிட வில்லை. பல இடங்களில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதும், அவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகம் பற்றியும் அவர் குறிப்பிடாது சஹ்ரானின் தாக்குதல்களை மட்டும் குறிப்பிட்டுக் கருத்துத் தெரிவித்திருப்பது அமைச்சருடைய பேச்சின் உள்ளார்ந்த அர்த்தத்தைக் கோடிட்டுக்காட்டுகிறது.

ஜனாதிபதியாக கோத்தாபய தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவரால் ஏற்படுத்தப்பட்ட அரச அவைக்குள் நீதி அமைச்சராக அலி சப்ரி உள்வாங்கப்பட்போது அதுபற்றி எழுந்த ஊடகங்கள் மற்றும் கருத்தலைகள் பற்றி நோக்குவோமாகில் அதன் உண்மைத்தன்மை புரியலாம். ராஜபக்சக்கள் அரசைப் பொறுப்பெடுத்த போது வழமைபோல தம்மில் சிலரையும் உள்வாங்கிக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்திருந்த பல முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு ஏமாற்றத்தைத் தருவனவையாக அவர்களின் ஏற்பாடுகள் அமைந்திருந்தன. ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் எடுத்த நிகழ்வில்கூட அவர்கள் எவரையும் அனுமதிக்கவில்லை. அதுவரை ராஜபக்சக்களுக்கு 'ஜல்ரா' போடுபவராக இருந்த முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாவைக் கூட அந்த நிகழ்வுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. பின்னர் நடைபெற்ற அமைச்சரவைத் தெரிவில் தானும் ஏதாவதொரு பதவிக்கு உள்வாங்கப்படலாம் என்று எதிர்பார்த்திருந்த அதாவுல்லாவுக்குக்கூட ஏமாற்றமே மிஞ்சியிருந்தது.

இத்தனை அரசியல் அதிரடித் திருப்பங்களுக்குப் பின்னர் நீதி அமைச்சராக அலி சப்ரி தெரிவு செய்யப்பட்டிருந்தை முன்னிட்டுப் பல வியூகங்கள் மக்கள் மத்தியில் காணப்பட்டன. அரசியல் பரப்புக்குப் புதிய ஒருவர் கொண்டுவரப்பட்டதன் உள்நோக்கம் பற்றிப் பல கருத்துகள் உலாவந்தன. சிறுபான்மை எதிர்ப்புணர்வுள்ள, விசேடமாக முஸ்லிம் எதிர்ப்புணர்வுள்ள பலர் அரசுக்குள் உள்வாங்கப்பட்டனர். அது மட்டுமல்லாது வழமையாக தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அரசு அமைக்கத் தேவைப்படும் சிறுபான்மை இனத்தவரின் ஒத்தாசை இம்முறை அவர்களுக்கு அவசியமற்றொதொன்றாகிப் போனதும் அவர்கள் இவ்வாறான நடவடிக்கைக்கு உறுதுணையானது எனலாம்.

கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது நடைபெற்ற இறுதி யுத்தத்தின் பின்னர் அரசின் நடவடிக்கைகளுக்குப் பக்க பலமாக இருந்த அமைச்சர் ஹிஸ்புல்லா போன்றவர்கள் கூடப் புறக்கணிக்கப்பட்டே புதிய அரசவை உருவாக்கப்பட்டது.

பின்னர் அவரால் அரபு தேசங்களின் உதவியோடு கட்டிமுடிக்கப்பட்ட சர்வதேச முஸ்லிம் பல்கலைக்கழகமும் பறிக்கப்பட்டு தற்போது கொரோனா தடுப்பு மையமாக மாற்றப்பட்டு இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இறுதிவரை அவர்களோடு ஒட்டியிருந்த அதாவுல்லாவுக்குக்கூட இதுவரை முக்கி யத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. இருந்தும் சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம் ஒருவரைக் கொண்டுவந்து, அதுவும் நீதி அமைச்சராக அமர்த்துவதன் மூலம் தாம் பல விடயங்களைச் சாதிக்கலாம் என்று அரசு நம்பியிருந்தது. சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளில் கைவைப்பது தொடர்பாக குறிப்பாக முஸ்லிம் இனத்தவரின் உரிமைகளில் கைவைக்கும்போது தமது வலையமைப்பிலுள்ள நேசநாடுகளிடமிருந்து தோன்றும் எதிர்ப்பைச் சம்பாதிக்காது அதனை எதிர்கொள்ள ஒருவரை அதுவும் சட்டத்துறையோடு சம்பந்தப்பட்ட ஒருவரை நியமிப்பது தொடர்பான நடவடிக்கையே அமைச்சர் அலி சப்ரியின் நியமனமெனவும் பேசப்பட்டது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இந்து கலாசார தமிழ் நிலங்கள் அதிகார பலம்கொண்டு பறிக்கப்பட்டு அவற்றை எல்லாம் சிங்கள மயமாக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவது வெளிப்படையே.


தமிழ் நிலங்களைச் சுருக்குவது போன்று முஸ்லிம் இனத்தின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காகவே ஹாதி நீதிமன்ற ஒழிப்பு என்ற கருத்தையும் உறுதிப்படுத்துவதாகவே மேற்குறிப்பிட்ட நகர்வுகள் காணப்படுகின்றன. இதுபோன்ற சிறுபான்மைக்கு எதிரான நடவடிக்கைகள் இலங்கையில் அதிகரிக்கும்போதே ஜெனிவா மாநாடு கூடவிருக்கிறது. அந்த மாநாட்டில் இவையும் எதிரொலிக்குமா? இல்லை அது தொடர்பானவர்கள் பெட்டிப்பாம்பாகி விடுவார்களா? ■

# வாரம் ஓர் ஆசனம் 09

## பாதாங்குஸ்தாசனம்

இந்த ஆசனத்துக்கு பாத கஸ்தாசனம் செய்யும் அதேமுறை பொருந்தும். அரை நிலையில் தலையை நிமிர்த்தியும் முழு நிலையில் முழங்கால்களை தலையால் முட்டியவாறும் செய்தல் வேண்டும். படங்களைப் பார்க்கவும்.

○ ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)





**செய்முறை:**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (தடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)
2. மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள் மட்டத்துக்கு மேல் உயர்த்தவும். உள்ளங்கைகள் தரையை நோக்கியவாறு இருக்க வேண்டும். பின்னர்; கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்தி புஜங்களை இரு காதுகளுடன் சேர்த்தவாறு வைக்கவும்.
3 மூச்சை வெளிவிட்டவாறு உடம்பை கிடை மட்டமாக தரைக்கு இணையாக முன்னோக்கி வளைக்கவும். மேலும் மூச்சை வெளிவிட்ட வண்ணம் உடம்பை கீழ் நோக்கி வளைத்து கைவிரல்களால் கால் பெருவிரல்களை கொழுவிப் பிடித்தவாறு தலையை நிமிர்த்தியபடி சுவாசிக்க வேண்டும். அரை நிலை.
4. இதன் உச்சநிலையாக நெற்றியானது முழங்கால்களைத் தொட்டிருக்க சாதாரணமாக சுவாசிக்கவும் (இந்நிலையில் கைகளை மடிக்கலாம். கால்களை மடிக்கலாகாது.) - உச்ச நிலை
5. பின்னர் மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு தலையைக் கைகளோடு சேர்த்தவாறு முதுகெலும்பின் அடிப்பகுதியிலிருந்து தரைக்கு இணையாக உயர்த்தி தொடர்ந்து மூச்சை உள்ளிழுத்தவாறு நிமிர்ந்து நேரான நிலைக்கு வரவும்.
6. மூச்சை வெளிவிட்டுக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள்களுக்கு இணையாக இறக்கி ஆரம்ப நிலைக்கு கொண்டு வரவும்.

**பயன்கள்:** உடம்பின் பின்புறம் உள்ள எல்லா தசைகள், தசைநார்கள், இடுப்பெலும்புகள், மூட்டுகள், தொடை எலும்பு, கால் நரம்புகள் ஆகியவை நன்றாக நீட்டப்படுகின்றன. முதுகுத்தண்டுவடம், இடுப்பு எலும்புகள் இறுக்கத்தன்மை குறைந்து முறுக்கேறும். தலைப்பகுதிக்கு குருதிஓட்டம் அதிகரிக்கும். ஜீரண உறுப்புக்கள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள் நன்கு வேலை செய்கின்றன. இடுப்பு பகுதியில் அதிகமாகக் காணப்படும் ஊளைச்சதைகள் மற்றும் தேவையற்ற கொழுப்புக்கள் குறைவடைகின்றன. இரப்பை, பித்தப்பை கல்லீரல், மண்ணீரல் ஆகியனவற்றின் இயக்கம் அதிகரித்து ஜீரண சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. கல்லீரல் அழற்சி, மலச்சிக்கல், நீரிழிவு முதலிய கோளாறுகள் நீங்கும். மூட்டுவலி, நாரிவலி, கழுத்துவலி நீங்கும். பெண்களுக்கான கர்ப்பப்பை மற்றும் சூலகம், சூலக குழாய்களது இயக்கத்தை மேம்படுத்துகிறது. பியூட்டறி தைரொயிட் மற்றும் பராதைரொயிட் சுரப்பிகளின் செயற்றிறனை அதிகரிக்கச் செய்து அவை சார்ந்த நோய்களை இல்லாமல் செய்கிறது.

**குறிப்பு:** இதேபோல் மூன்று தடவைகள் செய்தால் போதுமானது. உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டால் அடியேனது 077-1041455 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

தொடரும்...



## வயாவிளான் மாணவர்கள் மூவருக்கு சைக்கிள்கள்!

வயாவிளான், பெப்.1

வயாவிளான் மத்திய கல்லூரியில் கல்விகற்கும் மாணவர்கள் மூன்று பேருக்கு அண்மையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

போக்குவரத்து வசதி இன்றிச் சிரமப்பட்டு வந்த இந்த மாணவர்களுக்கு வயாவிளானைச் சேர்ந்த முருகேசு குடும்பத்தவர்களால் இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ர-இ)



## பத்து மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு

முல்லைத்தீவு,பெப்.1

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட பொருண்மியம் நலிந்த மாணவர்கள் 10 பேருக்கு சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வித்தியாபுரம், கற்சிலைமடு,கூழாமுறிப்பு மற்றும் புளியங்குளம் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே சைக்கிள்கள் வழங்கப்பட்டன. புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சந்திரரூபனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-19)

## மக்கள் நலன் வேண்டி விசேட பிரார்த்தனை

யாழ்ப்பாணம், பெப்.1

இலங்கை மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாத் தாக்கத்திலிருந்து மீள வேண்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ரக்கா வீதி ஸ்ரீ பத்தினாட்சி அம்மன் ஆலயத்தில் நாளை காலை 6.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பூசை நிறைவில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ.கேதீஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பாகவுள்ளது. (வ-இ)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

கொடிகாமம், பெப்.1

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தேசிய மாணவர் படையணிக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் பொன்சபாபதி மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டுகளில் கணிப்பீட்டு பயிற்சியில் பங்குபற்றி சிறப்பான இடங்களைப் பெற்ற மாணவர்கள் சின்னம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர். (ச-159)



தைப்பூசத்தை முன்னிட்டு தமிழமுது நண்பர்கள் வட்ட அமைப்பின் பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் பொருண்மியம் நலிந்த நிலையில் வாழும் 23 மாணவ மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு தலா 2000 ரூபா



பெறுமதியான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (வ-213)

# எந்தவொரு சொத்தையும் அரசு வெளிநாட்டுக்கு விற்காது

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு,பெப்.1

தற்போதைய அரசாங்கம் எந்தவொரு அரச சொத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யாது என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அனைத்து விடயமும் கருத்திற்கொள்ளப்படும்.

ஜனாதிபதியின் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டதற்கு அமைவாகவே அரசாங்கம் செயற்படும்.


கிழக்கு முனையத்தின் செயற்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இறுதி முடிவை எட்டுவதற்கு முன்னர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை கூடி ஆராயும் என்றார். (ஐ-இ)

### மீளத் திறக்கப்படுகின்றன மிருகக்காட்சிச் சாலைகள்

கொழும்பு, பெப்.1

கொவிட்19 தொற்றால் மூடப்பட்ட தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களமும், அதன் ஆளுகைக்குட்பட்ட தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக் காட்சிச் சாலை மற்றும் ரிதிகம சபாரி பூங்கா ஆகியன இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

திறக்கப்படுகின்ற இந்த மிருகக்காட்சிச்சாலைகள் மற்றும் பூங்காக்களில் கடுமையான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் அமுல்படுத்தப்படும் எனவும், அதேநேரம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஒரே நாளில் அல்லது ஒரே நேரத்தில் பார்வையிட அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-இ)



### மின் வேலியில் சிக்கி காட்டு யானைகள் சாவு

பொலநறுவை, பெப்.1

சட்டவிரோத மின் வேலியில் சிக்கி காட்டு யானைகள் மூன்று உயிரிழந்துள்ளன. பயிர்ச் செய்கையை வன விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கியே இவை உயிரிழந்துள்ளன.

இதன்படி, வெலிகந்த பகுதியில் காட்டு யானை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளதுடன், பொலநறுவை - மெதிரிகிரிய பகுதியிலும் சட்டவிரோத மின் வேலியில் சிக்கி இரு காட்டு யானைகள் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளன. (வ-இ)

### பாகிஸ்தான் செல்வோருக்கு பி.சி.ஆர் தேவையில்லை

பாகிஸ்தானுக்கு வரும் இலங்கையர்கள், நாட்டுக்கு வரும்போது பி.சி.ஆர். சோதனை அறிக்கையை முன்வைக்கத் தேவையில்லை என்று பாகிஸ்தான் சிவில் ஏவியேஷன் ஆணையம் வெளியிட்டுள்ள உள்வரும் பயணிகளுக்கான திருத்தப்பட்ட பயண ஆலோசனைக் கோவையில் குறிப்பிட்டுள்ளது. பயணத்துக்கு முன்னர் கொவிட்19 சோதனைக்கு வெவ்வேறு வழிமுறைகளுடன் பாகிஸ்தானின் சிவில் ஏவியேஷன் ஆணையம் நாடுகளை மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளது. அதில் ஏ பிரிவில் அவுஸ்திரேலியா, சீனா, ஈராக், நியூசிலாந்து, கட்டார், ஐஸ்லாந்து, இலங்கை மற்றும் சவூதி அரேபியா உள்ளிட்ட 24 நாடுகள் உள்ளன. சி பிரிவில் தென்னாபிரிக்கா, பிரிட்டன், பிரேஸில், அயர்லாந்து, போர்த்துக்கல் மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட ஆறு நாடுகள் உள்ளன. பி பிரிவில் ஏ மற்றும் சி பிரிவில் உள்ளடங்காத நாடுகள் அனைத்தும் அடங்குகின்றன. ஏ பிரிவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பாகிஸ்தான் வருவதற்கு பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை வழங்கத் தேவையில்லை. அதேசமயம் பி பிரிவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள் 72 மணிநேரத்துக்குள் எடுத்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். சி பிரிவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த பயணிகள் பாகிஸ்தான் நுழைவது தடைசெய்யப்பட்டுள்ளது. (வ-இ)

### 1000 ரூபா சம்பளம் கோரி பசறையில் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, பெப்.1

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி, அகில இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், பசறை பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாக நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அரசு தமது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டவாறு ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் எனவும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், கல்வியியலாளர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப)

### ஆணையாளரின் அறிக்கை இலங்கைக்குப் பாரதூரமானது

#### சிரேஷ்ட இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க

கொழும்பு, பெப். 1

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் அம்மையார் வெளியிட்டுள்ள அறிக்கை முன்னெப்போதுமில்லாத வகையில் மிகவும் பாரதூரமானதாக அமைந்துள்ளது என்று ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்திர வதிவிடப் பிரதிநிதியாகச் செயற்பட்ட சிரேஷ்ட இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளர் இரண்டு விடயங்களை முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளார். அதில் ஒன்று கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற, போர்க்காலத்தில் இடம்பெற்றன எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறலாக உள்ளது. மற்றைய முக்கியம் விடயம் இலங்கை அரசின் கட்டமைப்பு மாற்றம் பற்றியது. அதாவது ஜனநாயக அரசு என்பது இராணுவமயப்படுகின்றது என்ற விடயம்.

தற்போது மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே மேற்கொள்ளக்கூடிய விடயங்கள் என உறுப்பு நாடுகளுக்கு ஆணையாளர் பரிந்துரைத்துள்ள விடயங்களில் உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் வெளிநாடுகளில், இலங்கையில் போர்க்குற்றம் இழைக்கப்பட்டது என நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்தல், பயணக்கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் அவர்களது சொத்துக்களை முடக்குதல் ஆகியன இலங்கைக்கு பெரும் சவாலானவையாக மாறும் அபாயமுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

தற்போதைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சிலி நாட்டின் ஜனாதிபதியாக இருமுறை இருந்தவர். அவரது தந்தை சிலியின் இராணுவத்தில் ஜெனரலாக இருந்தவர். ஜனநாயகவாதியான அவர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலைசெய்யப்பட்டார். தனிப்பட்ட ரீதியில் அவர் இந்த விடயங்களை நன்கறிந்தவர். ஆணையாளரது பரிந்துரைகளை உலகிலுள்ள நாடாளு மன்றங்கள், செனற் மேலவைகள் ஆராயத் தொடங்கினால் இலங்கையிலுள்ள ஆட்சியாளர்களும் இராணுவத்தினரும் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். எனவும் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். (த-இ)


## மரண அறிவித்தல்



**இரத்தினசாமி துரைராசா**

(அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்க முகாமையாளர்)

வட்டுக்கோட்டை தென்மேற்கைச் சேர்ந்த இரத்தினசாமி துரைராசா (அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்க முகாமையாளர்) நேற்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வநாயகியின் அன்புக் கணவரும், செல்வராசா, ஜெயராசா, சிவராசா, கலாவதி, பிரகாசவதி, கருணாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினஜோதி, சந்திரஜோதி, சியாமளா, லதா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஆனந்தராஜ் (ஆசிரியர்) காலஞ்சென்ற ரகுநாதன், ஆதவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிற சுபீட்சன், நிரோஷன், தரண்னியா ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2021) திங்கட்கிழமை பி.ப 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்கதக வழக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுத்தென்மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நிதியாளர் அருட்தந்தை. எட்வின்நாதன் அவர்களின் பாசமிகு தந்தை

**திரு. பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சதாசிவம் தெட்சணாமூர்த்தி**
(ஓய்வுபெற்ற முதலியார்)



தோற்றம் 16.08.1947
மறைவு 30.01.2013

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று எட்டு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திதி - சங்கடஹரசதுர்த்தி

கஜபதி செட்டிலேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

(CS /22782)

மனைவி - சிவயோகமணி

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 11 . 1987
இறப்பு 30 . 01 . 2021

**கோபாலசுந்தரம் கவிதாஸ் (கவி)**

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசுந்தரம் கவிதாஸ் (கவி) அவர்கள் 30.01.2021 சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் கோபாலசுந்தரம் - இராயேஸ்வரி (சாந்தா) தம்பதியரின் அன்பு மகனும், கமல்ராஜ், கஜேந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லக்குட்டி - கனகம்மா, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசமணி தம்பதியரின் அன்புப் பேரனும், கிருபாகரனின் அன்பு மைத்துனனும், டிலக்சன், வினோத், கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2021) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
சிவன் வீதி.

தகவல்: குடும்பத்தினர்
076 3929 679

## கண்ணீர் அஞ்சலி



கலாநிதி
**சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி**
(முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர்-யாழ்ப்பாணம்)

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி சு.சிவநாயகமூர்த்தி அவர்கள் 30.01. 2021 அன்று கனடாவில் இயற்கை எய்தினார்.

*மீளாத்துயில் கொண்டு எம்மை*
*ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றீரோ மாமா?*
*கலையாத நினைவுகளுடன்*
*உதிரும் கண்ணீர் பூக்களால்*
*அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*மருமக்களாகிய எங்கள் கண்ணீரை*
*காணிக்கையாக்குகின்றோம்.*

நெட்டிலிப்பாய் பிள்ளையார்
கோவிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

குகன்
T.P: 077 546 9194,
077 024 1080
கனடா - 0014162611767

## கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 28 . 08 . 1934
ஆண்டவன் அடியில் 30 . 01 . 2021

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

கலாநிதி
**சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி**

(MA,BA, எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர், ஓய்வுபெற்ற அதிபர், வட்டாரக்கல்வி அதிகாரி-பண்டாரவளை, வட்டாரக் கல்வி அதிகாரி - நல்லூர், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் - மருதனார் மடம், யாழ்ப்பாணம்.)

அவர்கள் கடந்த 30.01.2021 சனிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நெடுந்தீவு பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
0779352456,0212052291.
கனடா- 0014162611767

மகாலெட்சுமி சிவபாதம் (ராணி)
(ஓய்வுபெற்ற ஆசிரியை-மருமகள்)
சஜீஷ்-சாரதா குடும்பம்
ஆரூரன்-சிவகௌரி குடும்பம்
கருணாகரன் குடும்பம்
சகோதரிமார் மற்றும் உறவினர்கள்.

## நீங்கா நினைவில்

19ஆம் ஆண்டு



மலர்வு 27.04.1938
உதிர்வு 01.02.2002

**அமரர் வெ.வேலு**
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)
திதி: 01.02.2021

25ஆம் ஆண்டு



அன்னை மடியில் 21.02.1977
அமலன் அடியில் 13.06.1996

**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

### போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் ஆணைக்குழுவுக்கு

கொழும்பு,பெப்.1
அரச பொது நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டி பரீட்சையின் பெறுபேறுகள், அரச சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெரிவுகள் இடம்பெற்ற பின்னர் பரீட்சை பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படும் என்று பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பீ. பூஜித தெரிவித்தார். கடந்த வருடம் பெப்ரவரி மாதம் குறித்த போட்டி பரீட்சை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

### கிழக்கு-முனையத்தை விற்கோம்
-மகிந்த

கொழும்பு, பெப். 1
கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் அதை யாருக்கும் கொடுக்க மாட்டோம். இது விற்கப்படவுமில்லை குத்தகைக்கு விடப்படவுமில்லை. அமைச்சரவையில் 99 சதவீதம் பேர் அதை விற்கக்கூடாது என்று கருதுகின்றனர். - என்றார். (கு-இ)



காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்
174வது இசை ஆராதனை விழா
அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 02.02.2021 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணி

நிகழ்ச்சி நிரல்

- தொடக்கவுரை : மிருதங்க வித்துவான் நல்லை க.கண்ணதாஸ் அவர்கள் இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
- ஈழத்துப் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள் வழங்கும் "மங்கள இசை" (1 மணித்தியாலயம்)
- ஈழத்துப் பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள், பக்க வாத்திய கலைஞர்கள் வழங்கும் "பஞ்சரத்தின கீர்த்தனைகள்" (1மணித்தியாலயம்)

குறிப்பு:- நிகழ்வு சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நடைபெறும். யாழ் கிளையிலிருந்து இலவச போக்குவரத்து சேவை நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்


# மூடப்படும் பாடசாலைக்கு உரிமை கோரும் 3 தரப்புக்கள்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலக் கட்டடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 3 தரப்புக்கள் முயற்சித்து வருகின்றன.

கந்தர்மடம் பகுதியில் ஆறுமுக நாவலரால் ஆரம்பிக்கப்பட்டது சைவப்பிரகாச வித்தியாலயம். தற்போது மிகவும் குறைந்தளவு மாணவர்களுடனேயே பாடசாலை இயங்குகின்றது. அந்தப் பாடசாலையை நிரந்தரமாகவே மூடும் அவலம் காணப்படுகின்றது. நிரந்தரமாக மூடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் பாடசாலையை பல தரப்புக்களும் குறிவைத்துள்ளன.

ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு ஜனாதிபதி செயலணி தனது அலுவலகப் பாவனைக்கு பாடசாலையைக் கோரியது. அவர்களுக்கு கல்வியங்காடு ஞானோதயா பாடசாலை வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் பயன்பாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கு ஒரு தரப்பு முயற்சி மேற்கொண்டுள்ளது. ஆரியபாசா கற்கைநெறிக்காக இந்தப் பாடசாலையை வழங்குமாறு இன்னொரு தரப்பும் கோரியுள்ளது.

இதேவேளை, ஜே/103 கிராம அலுவலர் பிரிவில் இந்தப் பாடசாலையே பொதுக் கட்டடமாகவுள்ளது. தேர்தல் காலத்தில் அந்தப் பகுதி மக்களின் வாக்களிப்பு நிலையமாகவும் இப் பாடசாலை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)


## மணிவிழா வாழ்த்துக்கள்



எமது வித்தியாலயத்தில் 01.02.2015 தொடக்கம் ஆரம்பக் கல்வி ஆசிரியராகக் கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி பாட வளர்ச்சிக்கும் வித்தியாலய வளர்ச்சிக்கும் பாடுபட்டு மாணவர்கள் மற்றும் வித்தியாலய சமூகத்தின் நன்மதிப்பினைப் பெற்று தனது 31 வருட 2 மாத சேவையிலிருந்து 31.01.2021 ஓய்வு பெற்று இன்று 01.02.2021 திங்கட்கிழமை மணிவிழாக்காணும் எம் மதிப்பிற்குரிய ஆசிரியை

திருமதி அகிலாண்டேஸ்வரி கணேசமூர்த்தி (SLTS-I)

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலத்தில் மேன்மேலும் சிறப்புற்று வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்


# கொரோனா சிகிச்சையிலிருந்து பரீட்சை எழுதும் மாணவர்கள்



**சி.சி.ரி.வியில் கண்காணிக்கும் பீடாதிபதி**

மட்டக்களப்பு, பெப். 1

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்களும் பெரியகல்லாறு பிரதேச மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கொவிட்-19 இடைநிலைப் பராமரிப்பு நிலையத்தில் இருந்தவாறு கலை கலாசார பீட இறுதி ஆண்டுப் பரீட்சையை எழுதி வருகின்றார்கள்.

பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் அனுமதியுடன் இப் பரீட்சையை எழுதி வருகின்றார்கள் என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.கெனடி தெரிவித்தார்.

3 நாள்களும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை ஒரு மணிவரை பரீட்சை நடைபெற்று வருகின்றது. இதற்குரிய சகல ஒழுங்குகளையும் சுகாதாரத் துறையினர் ஏற்படுத்தியுள்ளனர். அதனை சி.சி.ரி.வி மூலம் கண்காணித்து வருகின்றோம் என்றும் பீடாதிபதி தெரிவித்தார். (த-இ)


## ஆலய பூசகர் / குருக்கள் சேவை

சிவாகம முறைப்படி ஆசாரத்துடன் ஆலய வளர்ச்சிக்காக கோவில்களில் நித்திய. நைமித்தி. காமிக கிரியைகள் சேவை மனப்பாங்கோடு செய்வதற்கு அர்ச்சகர்கள். குருக்கள் உள்ளனர்.

074 179 1300

## வீடு வாடகைக்கு தேவை

நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ் இந்துக் கல்லூரியை அண்மித்த சூழலில் வீடு வாடகைக்கு தேவை.
(பி.ப 2.00 பிற்பாடு தொடர்பு கொள்ளவும்.)

077 326 6490

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**
மணமகள்களுக்கு மட்டும் (01.04.2021 முதல் 03.04.2021 வரை)

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

இல. 5, ஐந்தாம் ஒழுங்கை, பாலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596



## மணிவிழா வாழ்த்துக்கள்

### திருமதி இந்திராணி சூரியகுமார்

பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆரம்பக்கல்வி SLTS-I
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்



Best Wishes

Best Wishes

எமது பாடசாலையில் கடமையாற்றி சேவையில் ஓய்வுபெறும் ஆசிரியரை ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்

**சேவை விவரம்**

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
27.03.1990 - 13.09.2010
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
14.09.2010 - 01.02.2021
ஆசிரியர் சேவையில் - 30 வருடங்கள் 10 மாதங்கள்

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

Best Wishes



## பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண சபையின் நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.02.17 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத் தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.திருவாகரன்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு.
வடக்குமாகாணம்.
01.02.2021

# செய்யாத குற்றங்களை ஏற்கவே மாட்டார்களாம்!

## கோத்தாபய அரசு கூறுகின்றது

கொழும்பு, பெப்.1

சர்வதேச தடைகள் குறித்த அச்சம் காரண மாக நாங்கள் இழைக்காத குற்றங்களை இழைந்தோம் என்று ஏற்றுக்கொள்ளமாட் டோம். தடைகள் ஏதாவது விதிக்கப்படும் என்றால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையே அதைச் செய்ய வேண்டும். எனி னும், எமக்கு உதவ ரஷ்யாவும் சீனாவும் பாதுகாப்புச் சபையில் உள்ளன.

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகிய அர சின் முடிவு புத்திசாலித்தனமானது. தற் போது எங்களால் சுதந்திரமாகப் பதில்களை வழங்க முடியும். அதையே நாங்கள் செய் கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானங்க ளைக் கொண்டு வரலாம். ஆனால், நாங் கள் அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபை எழுப்பிய கேள்விகளுக்கு முன்னைய அரசால் உரிய பதில்களை வழங்க முடியவில்லை. முன்னர் இணை அனுசரணை வழங்கிய தால் எங்களுக்குப் பொறுப்பு இருந்தது. ஆனால், தற்போது அது இல்லை. குற்றச் சாட்டு குறித்து நாங்கள் பதில் அளிக்க லாம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள ரின் அறிக்கைக்கு இலங்கை சமர்ப்பித் துள்ள பதில் அறிக்கை குறித்து சாதகமான பதில் கிடைக்கும் - என்றார். (எ-22)

## நேற்றும் 864 பேருக்கு கொரோனா

கொழும்பு, பெப்.1

நாட்டில் நேற்றும் 864 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை யில் இதுவரையில் 60 ஆயிரத்து 174 பேர் வைரஸ் தொற்றுக்கு உள் ளாகியுள்ளனர்.

அதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 64 ஆயிரத்து 157 ஆக அதிகரித்துள் ளது.

தொற்றாளர்களில் 57 ஆயிரத்து 159 பேர் குணமடைந்துள்ளனர்.

6 ஆயிரத்து 682 பேர் வைத்தியசா லைகளில் சிகிச்சை பெற்று வருகின் றனர். (எ-22)

## கொரோனாச் சாவு 316

கொழும்பு, பெப்.1

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் மூவர் உயிரி ழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றுத் தெரிவித்தார். கொழும்பு, கடுவலை மற்றும் அங் குறுவாதோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த மூவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். 38, 68 மற்றும் 69 வயதானோரே உயிரிழந்துள் ளனர். அவர்களில் இருவர் பெண்களாவர்.

கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 316 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 303 பேர் கொரோனாவின் மூன் றாவது அலைக் காலப்பகுதியில் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### வடக்கில் இதுவரையும்...

கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட் டுள்ளன என்று வடக்கு மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களி லும் உள்ள சுகாதார சேவையினருக் குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் கடந்த சனிக்கிழமை முதல் நடைபெறு கின்றன. வடக்கு மாகாணத்தில் 9 ஆயி ரத்து 944 பேர் தடுப்பூசி ஏற்றுவதற்குத் தகுதி பெற்றிருந்தனர்.

முதல் நாளான நேற்றுமுன்தினம் 2 ஆயிரத்து 997 பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இரண்டாம் நாளான நேற்று ஆயிரத்து 530 பேருக்குத் தடுப் பூசி ஏற்றப்பட்டது. இதுவரை 45 சதவீத மானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட் டுள்ளது. நேற்று யாழ்ப்பாணத்தில் 875 பேருக்கும், கிளிநொச்சியில் 100 பேருக் கும், மன்னாரில் 200 பேருக்கும், வவு னியாவில் 210 பேருக்கும், முல்லைத் தீவில் 145 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டது. இன்றும் தடுப் பூசி வழங்கும் நடவடிக்கை தொடரும். என்றார். (எ-26)

### போரில்...

போரில் தோற்கடிக்க இந்தியா எமக்கு உதவியது. அதுபோன்று கொரோனா வைரஸுக்கு எதிரான போரில் நாம் வெல்வதற்கும் இந்தியா உதவுகின்றது. இவ்வாறு ஜனாதிபதியின் மூத்த ஆலோ சகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

190 நாடுகள் கொரோனா தடுப்பூசி களைப் பெற்றுக்கொள்ள வரிசையில் இருக்கின்றன. ஆனாலும் இலங் கைக்கு இந்தியா முன்னுரிமை வழங்கி யுள்ளது. ஜனாதிபதி கோத்தபாயவின் கோரிக்கைக்கு அமைவாகவே இந்திய அரசு இதனை வழங்கியுள்ளது.

சீன அரசு 3 லட்சம் தடுப்பூசிகளை விரைவில் வழங்கும். தேசிய ஔடதங் கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை யின் அனுமதி கிடைக்காமையால் அது தாமதமடைகின்றது.

இலங்கையில் 20 சதவீதமான மக்க ளுக்கு உலக சுகாதார நிறுவனம் வழங் கும் தடுப்பூசி கிடைக்கும். ஆனால் அது எப்போது கிடைக்கும் என்பதை உறுதி யாகச் சொல்ல முடியாது.

எப்படியிருப்பினும் ஆண்டிறுதிக்குள் தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு தகுதி யுள்ள அனைவருக்கும் அது வழங்கப் படும், என்றார். (ஒ.இ)

### இந்தியாவில்...

பார்க்கப்படுகின்றது என்றும் ஆரம்ப சுகாதார சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இதற்கும் மேலதிகமாக 3.5 மில்லியன் தடுப்பூசிகளைப் பெறு வது தொடர்பாகவும் ஆராயப்படுகின் றது. அவை நாட்டுக்கு வந்தால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவற்றை வழங்கும் நடவடிக்கைகள் அரசால் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எஇ)

### இலங்கையை...

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங் கைக்கான சீனத் தூதரகத்தின் அரசி யல் பிரிவுத் தலைவரும், ஊடகப் பேச் சாளருமான லு சொங்.

ஐக்கிய நாடுகள் ஆணையாளர் மிச் செல் பச்லெட் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப் படவுள்ள அறிக்கை தொடர்பில் கருத் துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ள தாவது:

மனித உரிமைகள் அரசியல் மயப்படுத் தப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படை யில் சில நிகழ்ச்சி நிரல்கள் முன்னெ டுக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் மற்றும் இன முரண் பாடுகளுக்கான தீர்வு என்பவை தொடர் பான விடயங்கள் இலங்கையின் உள் ளக விடயங்களாகும். இலங்கை இறைமை உள்ள நாடு என்ற வகையில் இந்த விடயங்களில் பிற தரப்புகள் தலையிடுவது பொருத்தமற்றது.

சீனக் குடியரசின் உள்ளக விடயங்களில் பிற நாடுகள் தலையீடு செய்வதை நாம் விரும்புவதில்லை. அதற்கு இடமளிப்ப தும் இல்லை. அதுபோன்று எந்த நாடு களினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகள் அல்லது சக்திகள் தலையீடு செய்வதற்கு இடமளிக்க முடியாது.

அதேபோன்று, அரசியல் மயப்படுத்தப் பட்ட மனித உரிமைகள் விடயத்தை நாடொன்றுக்கு எதிராக ஆயுதமாகப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது. என் றார். (எ-இ)

### பல்கலை...

ஏற்றுக்கொள்ள மாட்டோம். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியப் பிரதிநிதிகள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் இடித்தழிக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபியை 'அமை தித் தூபி' என்ற பெயரில் மீண்டும் கட்டி யெழுப்புவதற்கு யாழ்ப்பாணப் பல் கலைக்கழகப் பேரவை நேற்றுமுன் தினம் சனிக்கிழமை அனுமதி வழங்கி யுள்ளது.

பேரவைக் கூட்டத்தில், தூபி விவகாரத் தில் நடந்தவற்றை விலாவாரியாகக் குறிப்பிட்டு துணைவேந்தர் சிறிசற்குண ராஜா அறிக்கை சமர்ப்பித்தார். அதன் பின்னர் புதிய தூபியை 'அமைதித் தூபி' என்ற பெயரில் அமைக்க பேரவை அனுமதி வழங்கியது.

பேரவையின் முடிவை ஏற்றுக் கொள் கின்றீர்களா? என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் 'உதயன்' பத்திரிகை வினவியது.

'பேரவையின் முடிவை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்த மாணவர்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தூபி முள் ளிவாய்க்கால் நினைவுத் தூபி என்ற பெயரிலேயே அமைக்கப்படவேண்டும். வேறு எந்தப் பெயரில் அமைக்கப்படுவ தையும் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள் ளமாட்டோம்.

அதே இடத்தில், அதே வடிவத்தில், அதே பெயரில் தூபி அமைக்கப்படும்' என்று குறிப்பிட்டார்கள். (ஒ.5.26)

### உடலில்...

பற்றியது.

அதில் படுகாயமடைந்த அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த கோ. கவிதாதாஸ் என்பவரே உயிரிழந் துள்ளார். கடந்த 28ஆம் திகதி தாயுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் தன்மீது மண் ணெய் ஊற்றி தன் தாயாரை அவர் பயமுறுத்தியுள்ளார். சிறிது நேரத்தின் பின்னர், அவர் தீயைக் கையாள முயன்றபோது எதிர்பாராதவிதமாக அவர் மீது தீ பற்றிக்கொண்டுள்ளது. அதில் அவர் படுகாயமடைந்தார். யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் நேற்றுமுந்தி னம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள் ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேம குமார் மேற்கொண்டார். (எ-26)

### விபத்தில்...

ரிழந்துள்ளார். செல்லப்பன் ராஜ்குமார் (வயது54) என்பவரே உயிரிழந்துள் ளார். கடந்த 18ஆம் திகதி செட்டிக்குளம் நகர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் வீதியைக் கடக்க முயன்றபோது, மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி வந்த டிப்பர் மோதி விபத்துக்குள்ளானார். இவர் செட்டிக்கு ளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட் டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றுச் சிகிச்சை பயனின்றி உயிரிழந் துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி. கிஷோர் மேற்கொண்டார். (எ-110)

### வடக்கில்...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரி வித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனை ஆய்வுகூடத்தில் மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளி லேயே மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்று உறுதியான இருவர் மன்னா ரைச் சேர்ந்தவர்கள்.

மற்றையவர் திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர். இவர் யாழ்ப்பாணம் வந்தபோது எழுதுமட்டுவாழில் வைத்து அவரிடம் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. (எ-26)

## புராதன...

இந்தக் கோயிலுக்கு அருகில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ள தொல்லியல் திணைக்களம் ஏற்கனவே திட்டமிட்டுள்ள நிலையில் பௌத்த தேரர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அங்கு வந்து சென்றுள்ளமை மக்கள் மத்தியில் சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

தமிழ் மக்களின் பூர்வீக நிலமான வடக்கு, கிழக்கில் தங்கள் புராதன வழிபாட்டு இடங்களை அழிக்கும் நடவடிக்கைகள் கிரமமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தமிழ் மக்கள் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர். போரின் பின்னர் தொல்லியல் திணைக்களத்தால் தமிழ் மக்களின் காணிகள் பலவும் கையகப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கு எதிராக மக்கள் போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

தற்போது புதிய அரசு பதவியேற்ற பின்னர், வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை, புராதன வழிபாட்டு இடங்களை தொல்லியல் பிரதேசமாக அடையாளப்படுத்தி வருகின்றது. அந்தப் பகுதியில் விகாரைகள் இருந்தன என்று தெரிவித்து அங்கு அகழ்வாராய்ச்சிகளை நடத்துகின்றது. இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் மக்களின் புராதன வாழிடங்களை, வழிபாட்டு இடங்களை பௌத்த நிலங்களாக அடையாளப்படுத்தும் ஓர் திட்டமிட்ட நடவடிக்கை என்று தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முல்லைத்தீவு, குருந்தூர் மலைப்பகுதியில் தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வந்த சூலம் அகற்றப்பட்டு, அங்கு விகாரை இருந்தது என்று தெரிவித்து தொல்லியல் திணைக்களம் தற்போது அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. வவுனியா, வெடுக்குநாறி மலையில் தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வணங்கி வந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதியையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணம் நிலாவரைக் கிணற்றுக்கு அருகிலும் தொல்லியல் திணைக்களம் ஆராய்வுகளை நடத்த முயன்றிருந்தது. அந்தப் பகுதி மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் அங்கு கூடியதை அடுத்து, சாதாரண மதிப்பீட்டு நடவடிக்கை என்று தெரிவித்து தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து அகன்றிருந்தனர்.

தற்போது உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்துக்கு அருகிலும் தொல்லியல் அடையாளம் உள்ளது என்று தெரிவித்து தொல்லியல் திணைக்களம் ஆய்வுகளை ஆரம்பித்திருக்கின்றது. அது தொடர்பான மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள கடந்த ஆண்டு இறுதியில் அதிகாரிகள் சென்றபோது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையடுத்து அவர்கள் மதிப்பீட்டுப் பணிகளை நிறுத்தித் திரும்பியிருந்தனர். தற்போது அலுவலகத்தில் வைத்தே மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

"நேற்றுமுன்தினம் முற்பகல் அந்தப் பகுதிக்கு பிக்கு ஒருவர் வந்து ஆராய்ந்தார். அவர் வந்து சென்ற சில மணி நேரத்தில் அங்கு பொலிஸார் வந்து ஆராய்ந்தனர், அதன்பின்னர் மாலை இராணுவத்தினர் அந்தப் பகுதிக்கு வந்தனர்" என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

மதிப்பீட்டுப் பணிகள் முடிவடைந்த பின்னர் ஜனவரி மாதமளவில் தொல்லியல் அகழ்வுப் பணிகள் நடைபெறும் என்று கூறப்பட்டுவந்த நிலையில், பலரும் வந்து ஆராய்ந்து செல்வது சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது என்று மக்கள் கூறுகின்றனர். அதேவேளை, வடக்கின் சில இடங்களில் தமிழ் பௌத்தம் முன்னைய காலங்களில் பின்பற்றப்பட்டிருந்தது. வடக்கில் இப்போது மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளில் அதன் எச்சங்கள் எவற்றையும் கண்டெடுத்து, அந்த இடங்களில் விகாரைகளை அமைத்து சிங்கள பௌத்தத்தை நிறுவும் உள்நோக்கத்துடன் தற்போதைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்று தமிழ் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (எ-6,214)

## தமிழின...

வித்துள்ளது.

கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை, திணைக்க ளங்கள் ரீதியான ஆக்கிரமிப்பும் தொடர்கின்றது. இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கில் செயற்படும் சிவில் அமைப்புக்கள் பல இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் எமது ஆதரவையும் தெரிவித்துக்கொள்கின்றோம். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போராட்டத்தில் தமிழ்பேசும் தரப்பினர் அனைவரும் பங்கேற்க வேண்டும் எனத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் அழைப்பு விடுக்கின்றோம்- என்றுள்ளது. (ஒ,22)

## போராட்டத்துக்கு...

யங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் என்பன முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளன. போராட்டத்துக்கான ஆலோசனைக் கூட்டம் மட்டக்களப்பு அமெரிக்க மிசன் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த தலைவர்களும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துத் தலைவர்களும் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்ததுடன் பல பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டார்கள்.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உள்பட இலங்கை முழுவதும் திட்டமிட்டு நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐ.நா. மனித உரிமை சபைக்கு வடக்கு மற்றும் கிழக்கு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள், பல்சமய ஒன்றியங்கள் ஆகியவை இணைந்து அனுப்பி வைத்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கோரியும் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் போராட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை 4 நாள்கள் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

## தமிழரின்...

சைப்படுத்தக்கூடாது. அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வையும், பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியையும் வழங்குவது ஆட்சியாளர்களின் கடமையாகும். 'அப்போதுதான் நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். வடக்கு, கிழக்கு தமிழர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என்று அமைச்சர்கள் சிலர் எழுப்பியுள்ள கேள்விகள் தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த எமது ஆட்சியில் தமிழர்களின் மனதை நாம் வென்றிருந்தோம். அதேவேளை, சர்வதேச சமூகத்தின் மனதையும் வென்று காட்டியிருந்தோம்.

ஆனால், இந்த ஆட்சியில் அவற்றை ஏன் சாதிக்க முடியாமல் உள்ளது என்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதைவிடுத்து இன முறுகலை மேலும் வலுவடையைச் செய்யும் விதத்திலும், சர்வதேச மட்டத்தில் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலும் அரசிலுள்ள சிலர் கருத்துக்கள் வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினைகளை ஏற்படுத்த முனைவோரை ஜனாதிபதியும் பிரதமரும் தூரத்தில் வைத்திருக்க வேண்டும். அவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஆட்சியைத் திறம்பட முன்னெடுக்க முடியாது. நாடு இன்று நாலாபுறங்களிலிருந்தும் நெருக்குவாரங்களைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவருக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க நாம் தயார். ஆனால், நாட்டின் முக்கிய இடங்களை சர்வதேச நிறுவனங்களுக்குத் தாரைவார்க்க நாம் சம்மதிக்கமாட்டோம் என்றார். (எ-22)

## 1 லட்சம்...

றது. நீதிமன்ற உத்தரவையும் தமது எதிர்ப்பையும் மீறி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேச செயலகத்தினரும் துறைசார் அதிகாரிகளும் வேடிக்கை பார்க்கின்றனரா? என்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தமது ஆவேசத்தை வெளிப்படுத்துகின்றனர். வலிகாமம் வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அந்தப் பகுதி மக்கள் கண்ணீர்மல்க தம் கருத்துக்களை முன்வைத்தனர். பொன்னாலையில் இயங்குகின்ற தனியார் நிறுவனமொன்று வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து தினமும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தண்ணீரை உறிஞ்சி வருகின்றது. பன்னாலை மற்றும் இளவாலைக்கு இடையிலான பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணற்றில் இருந்தே மேற்படி தண்ணீர் குறித்த நிறுவனத்தால் உறிஞ்சப்படுகின்றது.

நீதிமன்றத்தில் இந்த வழக்கொன்று தற்போது நிலுவையில் உள்ளது. நீதிமன்றம் ஒரு நாளுக்கு 30 ஆயிரம் லீற்றர் தண்ணீரை உறிஞ்சவே தற்காலிக அனுமதி கொடுத்துள்ளது. ஆனால், நீதிமன்ற உத்தரவுக்கு மாறாகவும் மக்களின் எதிர்ப்பை மீறும் வகையிலும் தினமும் ஒரு லட்சம் லீற்றர் தண்ணீர் அந்தப் பகுதியில் இருந்து உறிஞ்சப்படுகின்றது.

வலிகாமம் வடக்கு ஒரு விவசாய பூமி. தினமும் 5 ஆயிரம் கிலோ மரக்கறிகளும் பழவகைகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. அதுபோக திராட்சைச் செய்கைக்குப் பெயர்போன இடமும் இதுவே. இவ்வாறான நிலையில் இந்த அத்துமீறிய தண்ணீர்த்திருட்டால் எமது பொருளாதாரமும் வாழ்வாதாரமும் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளப் போகின் றன. எமது எதிர்கால சந்ததி தண்ணீருக்காகத் தெருவில் நிற்கப்போகின்றது - என்றனர். இதையடுத்து அலைபேசி வாயிலாக உரிய திணைக்களத்தின ருடன் தொடர்புகொள்ளப்பட்டு, '30 ஆயிரம் லீற்றர் தண்ணீர் எடுக்கவே குறித்த நிறுவனத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூடுதலாகத் தண்ணீரை உறிஞ்சுவது நிரூபிக்கப்பட்டால் நிச்சயமாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

வழக்கம்போல பேச்சளவில் இருந்து விடாமல் செயலில் ஈடுபாடு காட்டுமாறு மக்களும் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டனர். (ம-319)

## தங்கள்...

களுக்கு விற்பனை செய்யும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேறு பகுதிகளில் வசிக்கும் வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்களே இவ்வாறான நடவடிக்கைகளை அதிகம் மேற்கொள்கின்றனர் என்று வலி. வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயம் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் தண்ணீர்க் கொள்ளை அதிகரித்துள்ளது. மக்களின் கிணறுகளில் இருந்து தனியார் நிறுவனங்கள் பலவும் தண்ணீரைக் கொள்ளையிட்டுச் செல்கின்றன. இதனால் மக்கள் பெரும் துன்பங்களைச் சந்திக்கின்றனர். ஆகப் பெரும் கவலை என்னவெனில் வலிகாமம் வடக்குப் பகுதிகளில் நன்னீர் கிணறுகளை உடைய யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் தமது கிணற்றுத் தண்ணீரை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்கின்றனர். தமது பகுதியில் வசிக்கும் பிற மக்களின் அன்றாட வாழ்வில் இது ஏற்படுத்தப்போகும் பெரும் பாதிப்பைக் கவனத்தில் கொள்ளாது இந்த மோசமான நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்கின்றனர். தம் சொந்த மக்களின் நலன்களை விடவும் தமது இலாபம் அவர்களுக்குப் பெரும் விடயமாகப் போய்விட்டது - என்று பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இவ்வாறான முறைப்பாடுகள் இதற்கு முன்னரும் கிடைத்துள்ளன என்பதை உறுதிப்படுத்திய பிரதேச செயலர், இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ம-319)

## சிப்பாய்...

சுட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. கேப்ரல் தரத்தைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை இராணுவப் பொலிஸாரும், முள்ளியவளைப் பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். உடல் தற்போது முல்லைத் தீவு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்றும், உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-19)



கொரோனாப் பெருந்தொற்று

## தோற்றம் குறித்த ஆய்வு ஆரம்பம்!

வுகான், பெப். 1

கொரோனாப் பெருந்தொற்றுக் குறித்த ஆய்வுப் பணிகளை வுகான் நகரில் ஆரம்பித்தது உலக சுகாதார அமைப்பால் நியமிக்கப்பட்டுள்ள குழு.

கொரோனாப் பெருந்தொற்றின் ஆரம்ப இடம் சீனாவின் வுகான் என்று நம்பப்படுகின்றது. இது தொடர்பில் ஆய்வு நடத்த ஒரு குழுவை சீனாவுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்புக் கேட்டுக்கொண்டது. எனினும் சீனா இதை மறுத்தது. இதையடுத்து சீனாதான் கொரோனாவை திட்டமிட்டுப் பரப்பியது என்று ஆணித்தரமாகக் கூறியது அமெரிக்கா. இதன்பின்னர் ஏற்பட்ட உச்சக்கட்ட அழுத்தங்களை அடுத்து குழுவொன்றை அனுமதிக்க சம்மதித்தது சீனா.

இதன்படி கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வுகான் நகருக்குச் சென்ற குறித்த குழு அங்கு கொரோனாப் பெருந்தொற்றுக் குறித்த ஆய்வை தற்போது முன்னெடுத்து வருகின்றது. (ம)

# விவசாயிகளுடன் பேச்சுக்கு தயார்!

மோடி அரசு அறிவிப்பு

**புதுடெல்லி, பெப்ரவரி 1**

**விவசாயிகளுடன் பேச்சு நடத்தத் தயார் என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. ஜனவரி மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து மோடி அரசு இவ்வாறு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**



இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய புதிய வேளான் சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி இந்திய விவசாயிகள் கடந்த இரண்டு மாதங்களாக டெல்லி புறநகர்ப் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மிகப்பெரும் அளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. விவசாயிகளுடன் 11 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. எனினும் விவசாயிகள் தமது கோரிக்கையை முழுமையாக அரசு ஏற்கவில்லை என்று தெரிவித்து அதிலிருந்து பின் வாங்கினர்.

அதன் பின்னர் விவசாயிகளின் போராட்டத்தை அரசு கண்டுகொள்ளவில்லை. இதைத் தொடர்ந்து கடந்த 26ஆம் திகதி உலகமே கவனிக்கும் படியாக மிகப்பெரும் போராட்டத்தை விவசாயிகள் முன்னெடுத்தனர்.

சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட உழவியந்திரங்களில் பேரணியாகச் சென்று அவர்கள் தம் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். விவசாயிகளில் ஒரு பகுதியினர் டெல்லி செங்கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தேசியக் கொடியை அகற்றி விட்டு தமது அமைப்புசார் கொடியை நட்டனர். இது பெரும் சர்ச்சையானது. இதைத் தொடர்ந்து விவசாயிகளின் போராட்டத்துக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என்று அழுத்தங்கள் தொடர்ந்தன.

இதைத் தொடர்ந்து வெளிப்படையான பேச்சுக்குத் தயார் என்று அறிவித்துள்ளது இந்திய மத்திய அரசு. விவசாயிகளும் பேச்சுக்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். (ம)

## ‘ஜெயா’ இருக்கை அ.தி.மு.க கொடி!

சென்னை, பெப். 1

கொரோனாவுக்குச் சிகிச்சை முடிந்து வீடுதிரும்பிய சசிகலா நேற்றுத் தனது காரின் முன்னிருக்கையில் அமர்ந்து சென்றார். தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பாணியில் அவரது செயற்பாடு அமைந்தது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

சசிகலா பயன்படுத்திய காரின் முன்பக்கத்தில் அ.தி.மு.கவின் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அ.தி.மு.கவில் பொதுச் செயலாளராக இருந்த சசிகலா பின்னர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தை அவர் தோற்றுவித்தார். எனினும் அ.ம.மு.கவின் கொடியைப் பயன்படுத்தாமல் அ.தி.மு.கவின் கொடியை அவர் பயன்படுத்தியமை சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

தமது கொடியைப் பயன்படுத்தியமைக்கு அ.தி.மு.க கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ம)

## குடியரசுதின அசம்பாவிதங்களால் ஒட்டுமொத்த நாடுமே அதிர்ந்தது!



புதுடெல்லி, பெப். 1

குடியரசுத் தினத்தன்று இடம்பெற்ற அசம்பாவிதங்களால் ஒட்டுமொத்த நாடும் அதிர்ச்சியடைந்தது என்று தெரிவித்தார் இந்தியப் பிரதமரான மோடி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனவரி 26ஆம் திகதி செங்கோட்டையில் நடந்த வன்முறை மற்றும் தேசியக்கொடி அவமதிப்பைக் கண்டு நாடே அதிர்ச்சி அடைந்தது. நாம் வரும் நாள்களை நம்பிக்கையுடனும் புதுமையுடனும் நிரப்ப வேண்டும். விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கும், அதற்காக பல நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசாங்கத்தின் முயற்சிகள் எதிர்காலத்திலும் தொடரும் என்றார். (ம)

English Classes
(தனி மற்றும் குழுவாகவும்)
வீடு வந்து கற்பிக்கப்படும்
Grammar with Spoken
Tp No:- 0773314608

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்.
பொறியியல் தொழினுட்பம்
தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம்
உயிர்முறைமைகள் தொழினுட்பம்
A/L 2022 2021
2021 Day Class வகுப்புக்கள் ஆரம்பம்
01.02.2021 திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு
தொ.பே: 077 0175346

லெபனான் மக்கள் கொரோனாப் பொதுமுடக்கத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர். இந்த முடக்கத்தால் ஏற்கனவே பின்தங்கிய தமது பொருளாதாரம் இன்னும் பின்தள்ளப்படு கின்றது என்பது அவர்களின் கருத்து.

இந்த நிலையில் மக்களின் போராட்டம் தற்போது கலவரமாக மாறியுள்ளது. லெபனானில் உள்ள மாநகராட்சி அலுவலகம் ஒன்றுக்கு போராட்டக் காரர்கள் தீவைத்துள்ளனர். (ம)



கட்டடம் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரசந்திக்கு அருகாமையில் ஒரு கடை, 1 ம் மாடியில் இரண்டு கடைகள், 2ம் மாடியில் இரண்டு கடைகள், வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் கொண்ட தனியார் கல்வி நிலையமாகவும், களஞ்சிய சாலையாகவும், நிறுவனமாகவும், வியாபார நிலையம் அமைப்பதற்கும் உகந்த இடம்.

தொடர்பு :- குரு
077 805 1655
077 596 3845



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.